




# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 202 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை (31.03.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 08, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50







## ஆதிலிங்க அகற்றலுக்கு நீதிகோரி போராட்டம்

(சிவகுமார் திவியா)

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும் நீதி கோரியும் வவுனியாவில் நேற்று (30) மாபெரும் பேரணியும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 10 மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபட்ட பின் ஆரம்பமாகிய பேரணி மணிக்கூட்டு கோபுர சந்தியை அடைந்து, அங்கிருந்து பசார் வீதி ஊடாக ஹொரவப் பொத்தானை வீதியை அடைந்து வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி ஊடாக மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் உட்பட ஏனைய விக்கிரகங்கள் இடித்து அகற்றப்பட்டமைக்கு கண்டனம் வெளியிட்டதுடன் அந்த விஷமச்செயலை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் இதன்போது முன்வைக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ''வெடுக்குநாறிமலை மீதான தாக்குதல் கௌதம புத்தரின் ஆன்மீகத்தோல்வி, ஈழத் தமிழனை வேரறுக்க நினைக்காதே, வெடுக்குநாறி எங்களின் இடம், மதச் சுதந்திரத்தை தடுக்காதே, தொல்பொருள் திணைக்களமே...

02 பக்கம்

## பேருவளை கடற்பரப்பில் நிலநடுக்கம்

02 பக்கம்

## இலங்கை முன்னேற இறுதிச் சந்தர்ப்பம்!

### வளமான சமுதாயத்தை உருவாக்க ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் அழைப்பு



இலங்கையை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு இதுவே கடைசி சந்தர்ப்பம் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பரஸ்பரம் குற்றம் சுமத்தாமல் அடுத்த தலைமுறைக்கு சுபீட்சமான சமூகத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று (30) முற்பகல் நடைபெற்ற 'ஐ.எம்.எவ். மற்றும் அதற்கு அப்பால்' என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடலில் பிரதான உரையை ஆற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதம நிறைவேற்று அதிகாரி கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு அப்பால் சென்று அடுத்த தலைமுறைக்கு வளமான சமூகத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அரசாங்கம்...

02 பக்கம்

## உஷ்



வரும் செவ்வாய்க் கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இராப்போசன விருந்துபசாரம் அளிக்கிறார் சஜித். ஆளுங்கட்சி பக்கம் தாவலாமென சந்தேகிக்கப்படும் எம்.பிக்கள் பலருடன் தொலைபேசியில் நீண்ட நேரம் பேசி அவர்களுடன் பல விடயங்களை கூறி வருகிறாராம் பிரேமதாச. ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களையும் தனியாக சஜித் சந்திக்கவுள்ளார்.

## கமெண்ட் கந்தர்...

உசைன் போல்ட் மாதிரியெண்டா அவ்வளவு வேகமா ஓடிடுவாரோ ரணில் ஐயா..



## உசைன் போல்டுக்கு நிகரானவர் ரணில்

### டயனா கமகே பெருமிதம்



(கே. சுபானி)

''உலக சம்பியன் உசைன் போல்ட்டுக்கு நிகரானவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே'' இவ்வாறு...

02 பக்கம்

## தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

(நா. தினுஷா)

வருமான வரி அதிகரிப்பு தொடர்பில் ஏப்ரல் மாதமாகும் போது தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாவிட்டால் ஏனைய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி விட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்க...

02 பக்கம்

## காணி அபகரிப்பு விவகாரம் மட்டக்களப்பில் கலவரமானது



### அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் இடம்பெறுவதாகக் கூறப்படும்...

02 பக்கம்

## நிதிப் பற்றாக்குறையால் ஆபத்தில் 'சுவசெரிய'

(கே. சுபானி)

'சுவசெரிய' அம்பியூலன்ஸ் சேவைக்காக திறைசேரியால் வருடந்தோறும் வழங்கப்படும் 4 பில்லியன் ரூபா கிடைக்கப்பெறாததால் சேவையை தொடர முடியாதுள்ளதாக மேற்படி அம்பியூலன்ஸ் சேவையின் பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து 'சுவசெரிய' அம்பியூலன்ஸ் சேவையின் பணிப்பாளர் சபை மேலும் தெரிவித்துள்ளதாவது,

திறைசேரியால் அம்பியூலன்ஸ் சேவைக்காக ஆண்டுதோறும் 3.2 பில்லியன் ரூபா வழங்கப்படுகிறது.

02 பக்கம்

## வறுமை காரணமாக கொகிலை நுகர்வு 40 வீதமாக அதிகரிப்பு

### பெருந்தோட்டப் பகுதியில் 67 வீதமானோருக்கு உணவுப் பாதுகாப்பில்லை

(நமது விசேட செய்தியாளர்)

நாட்டில் 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கொகிலை கிழங்கு மற்றும் கொகிலை கீரை ஆகியவற்றின் நுகர்வு 40 வீதத்தால் அதிகரித்துள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய பயிற்சி, ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போஞ்சி நுகர்வு...

02 பக்கம்

## ஆணைக்குழுக்களில் பாரிய மாற்றங்களைச் செய்ய ஏற்பாடு

### மே மாதம் பாராளுமன்றத்துக்கு வருகிறது புதிய சட்டமூலம்

(நா. தினுஷா)

புதிய ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் சுயாதீன ஆணைக்குழுக்களில் பாரிய மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோன்று, ஆணைக்குழு உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், தூதுவர்கள் என பல்வேறு தரப்பினரும் சொத்து விபர அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இதனூடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தை...

02 பக்கம்

## 13ஆவது திருத்தம் நாட்டுக்கு அவசியம்

### தமிழர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்கிறார் சந்திரிகா



(நா. தினுஷா)

நான் இறந்தாலும், 13ஆவது அரசியலமைப்பு வேண்டும் என்பதே எனது கோரிக்கையாக இருக்கும். இந்தத் திருத்தமின்றி நாட்டை முன்னெடுக்க முடியாது. தமிழ் மக்கள் குறைந்தது 13ஆவது திருத்தம் தமக்கு போதுமென்று கருதுகிறார்கள் என்றால், அதனையாவது கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு அப்பால், நாட்டின் மீது அன்பு செய்யும், முன்னேற்ற விரும்பும்...

02 பக்கம்

## தங்கத்தின் விலை உயர்வு



நாட்டில் தங்கத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக சந்தைத் தரவுகள் தெரிவித்தன.

02 பக்கம்

## திறைசேரி செயலருக்கு எதிரான வழக்கு மே 22இல்

திறைசேரி செயலாளருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் தாக்கல் செய்த இரண்டு மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தால் எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்ற உத்தரவுக்கு இணங்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எதிராக இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு விண்ணப்பங்களும் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று (30) விசாரணைக்கு வந்த போது, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் விண்ணப்பங்கள் தொடர்பான பல ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு மேலும் கால அவகாசம் கோரினார்.

02 பக்கம்

## இலங்கை முன்னேற...

அதில் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

டி.எஸ்.சேனாநாயக்கவின் முன்மொழிவுகளுக்கமைய செயற்படாதது மற்றும் 1965ஆம் ஆண்டு ஷெனோய் அறிக்கையை அமுல்படுத்தாதது உட்பட அபிவிருத்தியை அடைவதற்கான வாய்ப்புகளை இலங்கை தவறவிட்டதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, 1978 இனப்பிரச்சினையால் நாட்டின் முன்னேற்றம் மந்தமடைந்ததாகவும், அதன் மூலம் நாட்டில் மீண்டும் அபிவிருத்திக்கான அடித்தளத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இழந்ததாகவும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையை பிரதான பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து பிரிக்க முடியாது எனவும், நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் அதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பசுமைப் பொருளாதாரத்திற்கான இலங்கையிலுள்ள சாத்தியக்கூறுகள் சாதகமாக உள்ளதாகவும், நாடு அதனை நோக்கிச் செல்வதுடன், விரைவில் டிஜிட்டல் மயமாக்கலை ஆரம்பிப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீ லங்கன் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன ஏற்கனவே நாட்டின் வளங்களை அதிகம் வீணடித்துள்ளன. அவற்றுக்காக அன்றி, வறியவர் மற்றும் பாதிக்கப்பட்டோரின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கு பணம் தேவைப்படுவதாகவும் இங்கு ஜனாதிபதி தெரிவித்தார்.

## தங்கத்தின்...

கொழும்பு செட்டியார் தெரு தங்க சந்தையில் நேற்று முன்தினம் (29) ஒரு பவுன் ஒரு இலட்சத்து 61 ரூபாவாக காணப்பட்ட 22 கரட் தங்கத்தின் விலை நேற்று (30) காலை ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 800 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அத்துடன், நேற்று முன்தினம் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட ஒரு பவுன் 24 கரட் தங்கத்தின் விலை நேற்று ஒரு இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது.

## நேத்ரா அலைவரிசையில் இன்று

தேசிய ரூபவாஹினி நேத்ரா அலைவரிசையில் இன்று வெள்ளிக்கிழமை (31) இரவு 10.00 மணிக்கு ஒளிபரப்பாகும் சமகால விவகாரங்கள் தொடர்பில் ஆராயும் 'அஸ்திரம்' நிகழ்ச்சியில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்துகொள்கிறார். நேர்காணல், ஒலி ஒளிபரப்பாளர் சிவராஜா தக்கீஷன்.

## பேருவளை கடற்பரப்பில்...

*(நா. தினுஷா)*

பேருவளையிலிருந்து 24 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடற்பரப்பில், நேற்று (30) 3.7 ரிச்டர் நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாகவும் களுத்துறை, மக்கொன, பிலியந்தலை போன்ற பிரதேசங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட புவியியலாளர் நில்தினி தல்தென தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 1.02 மணியளவிலேயே இந்த நிலநடுக்கம் இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நான்கு நிலநடுக்க அவதானிப்பு மத்திய நிலையங்களில் பதிவாகியிருந்தது. அதன்பிரகாரம், பேருவளையிலிருந்து 24 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடற்பரப்பில் 3.7 ரிச்டர் அளவு நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தை தாமும் உணர்ந்ததாக மக்கள் எமக்கு அறிவித்திருந்தார்கள்.

களுத்துறை, மக்கொன, பேருவளை, பெந்தோட்டை மற்றும் பிலியந்தலை போன்ற பிரதேசங்களில் வாழும் மக்கள் இந்த நிலநடுக்கத்தை உணர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதனூடாக சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. 6.5 - 7 ரிச்டர் அல்லது அதனைத் தாண்டும் நிலநடுக்கம் பதிவாகும்போதே அதனை சுனாமி முன்னறிவிப்பாகக் கருதமுடியும்.

களுத்துறை, மக்கொன பிரதேசத்திலேயே அதிகளவு நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக பேருவளை, பிலியந்தலை ஆகிய பிரதேசங்களிலும் சற்று அதிகமாக உணரப்பட்டுள்ளது. வீடுகளின் கூரைகள் மற்றும் வீட்டுப் பொருட்கள் நடுக்கத்துக்குள்ளானதாகவே அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அறிவித்திருக்கிறார்கள்.

## 13ஆவது திருத்தம்...

சகலரும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்காக அல்லது அவ்வாறான மாற்று திட்டமொன்றுக்காக போராடி அரசாங்கத்திடமிருந்து அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

'முழுமையான மாற்றத்துக்கான ஆரம்பம்' என்ற தொனிப்பொருளில் இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் ஜனநாயகம் நிலைக்கவேண்டுமெனில், அதற்கான அடிப்படைப் பண்புகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மக்களின் உரிமைகள், அவர்களின் சுதந்திரம், ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் நிறுவனங்களின் படிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை முறையாக கையாள வேண்டும். எனவே, ஜனநாயகம் என்பது ஒவ்வொரு விடயப்பரப்பும் ஒன்றுடன் ஒன்று பிணைந்தே உள்ளது.

நாட்டிலுள்ள சகல இனம் மற்றும் சமயங் களைப் பின்பற்றும் மக்கள் அவர்களின் உரிமைகளுடன் சமாதானமாகவும், சமத்துவத்துடனும், கௌரவத்துடனும், பல்வகைத்தன்மையை மதித்தும் வாழவேண்டும். ஆனால், எமது நாட்டில் அந்தத் தன்மைகள் இல்லை.

முன்னோக்கிச் செல்லவேண்டுமெனில் பொருளாதார ரீதியில் பலமாக இருக்க வேண்டும். ஆனால், நாம் பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை சந்தித்துள்ளோம் என்பதை அரசாங்கமே பகிரங்கமாக அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட ஊழல்களே அதற்குக் காரணமாகும்.

அரசாங்கம் என்பது, ஆளுந்தரப்பிலுள்ள அரசியல்வாதிகள், நிறைவேற்றுதுறை, பொலிஸ் ஆகியோரை உள்ளடக்கியதாகும். நாம் ஜனநாயக நாடு அல்ல. நாம் தோல்வியடைந்த அரசு. ஆனால், சுதந்திரம் கிடைத்தபோது 150 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் - முதல் ஐந்து நாடுகளில் இலங்கையும் ஓர் அரசாக இருந்ததை மறந்துவிடக்கூடாது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு சிறந்த அபிவிருத்தியையும், தொழில்வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்தார்கள் என்றால் போதுமானதாக இருக்கும் என்பது ஒருசில அரசியல் தலைவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. இது முழுமையான பொய்யாகும். அவ்வாறான, கருத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

அரசியலமைப்பினூடாக தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட ஏனைய இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கான உரிமைகளை ஏன் எம்மால் பெற்றுக்கொடுக்க முடியாது? எதற்காக, சிங்கள பௌத்தர்கள் என்று உரிமை கொண்டாடுகிறோம்? இன வேறுபாடற்ற சகோதரத்துவம் இருந்ததாலேயே அன்று அந்நியர்களிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டோம். இருந்தபோதும், எதற்காக எமக்கிருக்கும் உரிமைகளை ஏனைய மக்களுடன் பகிர்ந்துகொள்வதில் பொறாமை கொண்டவர்களாகவும் விருப்பம் இல்லாதவர்களாகவும் இருக்கிறோம் என்பது புரியவில்லை.

நாட்டுமக்களிடையே வர்க்கப் பிரச்சினையை மேலும் மேலும் தோற்றுவிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. நாட்டில் யுத்த நிலையொன்று இடம்பெற்றதை ஒருசில அரசியல்வாதிகள் மறந்துவிட்டார்கள். என்னிடம் பேசும் அநேகமானவர்கள் 13ஆவது அரசியலமைப்பு தொடர்பில் பேச விரும்புவதில்லை.- என்றார்.

## ஆணைக்குழுக்களின்...

வர்த்தமானியில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எதிர்வரும் மே மாதத்தில் இந்தச் சட்டத்துக்கு அனுமதியை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்வரும் நான்காம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற கூட்டத்தொடரின்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (30) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலஞ்ச, ஊழல் சம்பவங்கள் தொடர்பான வழக்கு பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்காக சொத்து முகாமைத்துவ சட்டமூலமொன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது. மேலும், நீதிமன்றத்திலுள்ள வழக்கு பொருட்களை அகற்றுவது தொடர்பில் புதிய சட்டமொன்றை எதிர்பார்த்துள்ளோம்.

இந்நிலையில், ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சுயாதீனமாகவே செயற்படுவார்கள். ஆணையாளர்கள் தாம் சுயாதீனமானவர்கள் என்று சவால் விடுத்து விடுபடுவதற்கு தற்போதிருக்கும் வாயப்புகள் புதிய ஊழல் ஒழிப்புச் சட்டத்தில் கிடைக்காது. சுயாதீன ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவர் அவரின் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றாவிட்டால் அதனை தேடிப்பார்க்க எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவரை பதவியிலிருந்து நீக்குவதற்காக அவர்களின் செயற்பாட்டு கோளம், சட்டத்தை முறைகேடாக பயன்படுத்துதல் உள்ளிட்ட காரணங்களின் அடிப்படையில் பாராளுமன்றத்துக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முடியும். அதனடிப்படையில் இந்த சுயாதீன ஆணைக்குழுக்களின் ஆணையாளர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். நாங்கள் தனித்து அவ்வாறான தீர்மானங்களை எடுக்கப்போவதில்லை. ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக செயற்படுவதில்லை, அரசியல்வாதிகளுக்கு ஏற்றவாறு செயற்படுகின்றன. பக்கச்சார்பாக செயற்படுகின்றன என்று மக்களிடமிருந்து முறைப்பாடு பதிவு செய்யப்படுமாக இருந்தால் அவற்றை கவனத்திற்கொண்டு இறுதித் தீர்மானங்களை எடுக்க நேரிடும்.

மேலும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு ஓய்வுபெற்ற அதிகாரிகளை நியமிக்கும் முறையை நீக்கியுள்ளோம். அதற்குக் காரணம், ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் வெற்றியடைவில்லை. ஜனாதிபதி ஆணைக்குழு, ஜனாதிபதி விசேட ஆணைக்குழு என்பவற்றுக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருக்கிறது. குறிப்பிட்டவொரு விடயம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமானால் அவர்களின் செயற்பாடுகள் நிறைவடைந்ததும் அவர்களின் கடமைகள் அத்துடன் நிறைவடைந்துவிடும்.

ஆனால், சுயாதீன ஆணைக்குழுக்கள் நிரந்தரமானவை. அதனால், ஓய்வுபெற்றவர்களுக்கு மாறாக தற்போது அரச சேவையில் இருக்கும் விடயப்பரப்பு தொடர்பில் அக்கறை கொண்டவர்களை சுயாதீன ஆணைக்குழுக்களின் ஆணையாளர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச சேவையிலுள்ளவர்களை நியமிக்கும்போது, அவர்கள் தவறு செய்யமாட்டார்கள். அதனால், சேவை உறுதிப்பாடொன்று எமக்கு இருக்கிறது. அதற்கப்பால் விசாரணை நடவடிக்கைகளை அவர்கள் சுயாதீனமாக முன்னெடுக்க வேண்டும். அதேபோன்று, தாம் சுயாதீனமானவர்கள் என்பதற்காக அரசியல்வாதிகளுக்கு ஏற்றவாறு செயற்பட முடியாது.

அரசியல், நிர்வாக செயற்பாடுகள் இன்று முற்றிலும் மாற்றத்தை சந்தித்துள்ளன. சொத்து பொறுப்புகள் தொடர்பான சட்டம் மிகவும் பழமையானதாகும். சொத்து விபர தகவல்களை வெளியிட்டால் மாத்திரம் போதாது. அவற்றிலுள்ள குறைபாடுகளை ஆராய்ந்து அதுதொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான எந்தவொரு ஏற்பாடும் இல்லை. சொத்து விபர அறிக்கைகளில் இருக்கும் குற்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தெளிவான முறைகள் எதுவும் இல்லை.

ஒருவேளை சொத்துவிபர அறிக்கையை சமர்ப்பிக்காவிட்டால் நூறு ரூபா வரையிலான தண்டப்பணமே அறவிடப்படுகின்றது. பாரியளவில் குற்றம் செய்பவர்ளுக்கு இது தாக்கத்தை ஏற்படுத்தாது - என்றார்.

## ஆதிலிங்க...

வெளியேறு' போன்ற கோஷங்களை எழுப்பியிருந்ததுடன், பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

பேரணியாக சென்ற மக்கள் வைத்தியசாலை சுற்றுவட்ட பகுதியில் அமைந்திருந்த தொல்பொருள் திணைக்கள அலுவலக வளாகத்திற்குள் சென்று வாயிலை மறித்து 'தொல்பொருள் திணைக்களமே வெளியேறு' என கோஷமிட்டனர். சுமார் 15 நிமிடங்கள்வரை குறித்த வாயிலை முற்றுகையிட்ட மக்கள் பின்னர் அங்கிருந்து வெளியேறி மாவட்ட செயலகத்துக்குச் சென்றனர்.

ஜனாதிபதிக்கான மகஜர், மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திரவிடமும் ஜனாதிபதியின் வடக்கிற்கான இணைப்பாளரும், மேலதிக செயலாளருமான ஈ. இளங்கோவனிடமும் கையளிக்கப்பட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டன.

இதனையடுத்து இது குறித்து ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோர் இணைந்து வாக்குறுதி வழங்கியதையடுத்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர்.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், செ.கஜேந்திரன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன் மற்றும் பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள், சமயப் பெரியார்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், காணாமல்போன உறவுகளின் சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தனர்.







## தொழிற்சங்கங்கள்...

நடவடிக்கையை மேற்கொண்டும் இதுவரையில் தமக்கு தீர்வு கிடைக்கவில்லை என்றும் மாறாக, அரசாங்கம் தொடர்ந்து தொழிற்சங்கங்களின் தலைவர்கள் மீது அடக்குமுறையை பிரயோகித்து வருவதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர் தொழிற்சங்கத்தின் ஊடகப் பேச்சாளரும் தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளருமான சிரேஷ்ட விரிவுரையாளர் சாருத்த இலங்கசிங்க தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில்,

அரசாங்கம் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுத்து வருகின்றது. இவ்வாறு தொழிற்சங்கத் தலைவர்களை முடக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கும் அவர்களின் தீர்வையும் எதிர்பார்த்திருந்தேன். ஆனாலும், வருமான வரி அதிகரிப்பு பிரச்சினைக்கு இதுவரையில் எந்தவொரு தீர்வும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இந்நிலையில், கலந்துரையாடலொன்றுக்காக ஜனாதிபதிக்கு இறுதிக் கடிதமொன்றைப் பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளோம்.

குறுகிய காலத்துக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் தீர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான தீர்மானமொன்று எங்களுக்கு அவசியமாகவுள்ளது. ஏனைய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்க தீர்மானித்திருக்கிறோம்.

வரி அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்க உரிமைகளைக் கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவும் எதிர்பார்த்திருக்கிறோம் - என்றார்.

## திறைசேரி செயலருக்கு...

அரசியலமைப்பின் 105(3) பிரிவின் கீழ் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன மீது குற்றம் சுமத்த உத்தரவிடுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரும் கோரியுள்ளனர்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் புவனேக அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

## நிதிப் பற்றாக்குறையால்...

இந்நிலையில், இவ்வாண்டு இந்த அம்பியூலன்ஸ் சேவைக்காக திறைசேரியிடமிருந்து 2.5 பில்லியன் ரூபாவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெறப்பட்ட தொகையில் ஊழியர்களுக்கான ஊதியத்துக்காக ஆண்டுக்கு 1.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகிறது.

அம்பியூலன்ஸை புதுப்பித்தல், ரயர் மற்றும் ஏனைய உதிரிப்பாக கொள்வனவுக்காக ஆண்டுதோறும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான தொகை செலவிடப்படுகிறது.

நாடுமுழுவதும் 24 மணிநேரமும் 279 அம்பியூலன்ஸ்கள் சேவையில் ஈடுபடுவதுடன், நாளொன்றுக்கு அவசர தேவை நிமித்தம் 1050இற்கும் அதிகமான அம்பியூலன்ஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும் திறைசேரியிடமிருந்து அம்பியூலன்ஸ் சேவைக்காக மார்ச் மாதத்துக்காக வழங்கப்படும் தொகை இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதனால் அம்பியூலன்ஸ் சேவையை கொண்டுநடத்துவதற்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபரின் உதவியை நாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அம்பியூலன்ஸ் ஒன்றின் சேவைக்காக ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது என தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பணம் கிடைக்கப்பெறாமை தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்படவில்லை என சுகாதார இராஜாங்க அமைச்சின் செயலாளர் டொக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி காலத்தின்போது மேற்படி அம்பியூலன்ஸ் சேவை இந்திய அரசால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இச்சேவையை ஹர்ஷ டி சில்வா மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோரின் தலைமையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துவைத்தமை குறிப்பிடத்தக்கது.

## வறுமை காரணமாக...

30 வீதத்தாலும் கெரட் நுகர்வு 29 வீதத்தாலும் பூசணிக்காய், கத்தரிக்காய் ஆகியவற்றின் நுகர்வு 27 வீதத்தாலும் கீரை வகைகளின் நுகர்வு 10 வீதத்தாலும் குறைவடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் 86 வீதமானோர் உணவுக்காக பயன்படுத்தப்படும் பொருட்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளதுடன், 75 வீதமானோர் உணவு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் பொருட்களை குறைத்துள்ளனர். மேலும், 45 வீதமானோர் உணவு வேளையையும் 38 வீதமானோர் உணவு வகைகளின் எண்ணிக்கையையும் குறைத்துக்கொண்டுள்ளதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

பெருந்தோட்டத்துறையில் 68 வீதமானோர் தமது நாளாந்த வருமானத்தின் பெரும்பகுதியை உணவுக்காக செலவிட்டுள்ளனர். இரத்தினபுரி, அம்பாறை, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 75 வீதமான மக்கள் தாம் சம்பாதித்த சகல பணத்தையும் உணவுக்காகவே செலவிட்டுள்ளனர்.

நகர்ப்புறங்களில் 43 வீதமானோரும் கிராமப்புறங்களில் 52 வீதமானோரும் பெருந்தோட்டத் துறையில் 67 வீதமானோரும் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உசைன் போல்ட்டுக்கு...

சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகத்தின் முன் நாட்டை வெற்றிகொள்ளும் ஓர் ஒப்பற்ற அரசியல் தலைவர். அவர் அரசியல் களத்தில் சிறந்த வீரராக உள்ளதுடன், உலக சம்பியனான உசைன் போல்ட்டுக்கு இவர் மட்டுமே நிகரானவர் எனவும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைக்குறைப்பு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும், எரிபொருள் விநியோகம் தொடர்பில் போட்டி நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

எரிபொருளுக்கான திறந்த சந்தையை உருவாக்குவது தொடர்பில் மேற்கொண்ட தீர்மானம் வரவேற்கத்தக்கது. அதேவேளை, போட்டியின்றி தனித்து செயற்படும் எந்தவொரு நாட்டாலும் மீண்டெழுவது கடினம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## காணி அபகரிப்பு...

காணி அபகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தை நேற்று (30) முற்றுகையிட்டு மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது கலவரம் ஏற்பட்டது. இதன்போது காயமடைந்த பெண்ணொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன், அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலிருந்து இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோர் இடைநடுவில் வெளிநடப்பு செய்தனர்.

மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்து. இந்நிலையில், காலை 9 மணிக்கு வாகரை பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வு, வாகனேரியில் சோலர் மின்சார திட்டத்திற்கு 352 ஏக்கர் வயல் காணி அபகரிப்பு, மயிலத்தைமடு மேய்ச்சல்தரை காணி அபகரிப்பு என அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் அபகரிப்பை நிறுத்தக் கோரி பொதுமக்கள் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஒன்றுதிரண்டனர்.

இதனையடுத்து ஒன்றுதிரண்ட பொதுமக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்டோர் மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தை நோக்கி பேரணியாக சென்ற நிலையில், அவர்களை காரியாலய பகுதிக்கு செல்லவிடாது பொலிஸார் தடுத்துநிறுத்தி வாசல்கதவை பூட்ட முற்பட்டனர். இதன்போது அதனை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் உட்செல்ல முற்பட்டபோது அதனை பொலிஸார் தடுக்க முற்பட்ட நிலையில் பெண் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதனையும் மீறி மாவட்ட செயலகப் பகுதிக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள் நுழைந்ததையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டதுடன், மாவட்ட செயலகத்துக்குள் உள்நுழையும் கோட்டை கதவை பொலிஸார் பூட்டி உட்செல்லவிடாது தடுத்து நிறுத்தினர். இதனால் அந்தக் கதவின் முன்னால் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பாதுகாப்புக் கடமைக்கு மேலதிக பொலிஸார் வரவழைத்து பாதுகாப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையில் கூட்டத்திற்கு வருகைதந்திருந்த இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். இந்நிலையில், கூட்டத்திற்கு வருகை தந்திருந்த சில அதிகாரிகள் மற்றும் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களை காரியாலயத்துக்கு செல்லவிடாமல் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்க அதிபருடன் பொலிஸார் கலந்துரையாடி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அதிகாரிகள் மற்றும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை உட்செல்ல அனுமதித்தனர்.

இதனைத் தொடர்ந்து அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காணி தொடர்பாக அரசாங்க அதிபரிடம் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கேள்வி கேட்ட நிலையில் அவர், காணி தொடர்பாக எங்களுக்குத் தொடர்பில்லை. அதனை பிரதேச செயலகங்களிடம் கேட்குமாறு தெரிவித்ததையடுத்து பல வாத பிரதாபங்களின் மத்தியில் இங்கு மக்களுக்குத் தீர்வு கிடைக்காது என தெரிவித்து கூட்டத்திலிருந்து இராஜாங்க அமைச்சர் வெளியேறினார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான சி.சந்திரகாந்தனிடம் பா.உறுப்பினர் இரா.சாணக்கியன் காணி அபகரிப்பு தொடர்பாக குற்றச்சாட்டுகளை முன்வைத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், அபிவிருத்திக்குழுத் தலைவர் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை அவமதித்து பேசியதுடன் அமளிதுமளி ஏற்பட்டதையடுத்து இரா.சாணக்கியன் அங்கிருந்து வெளிநடப்பு செய்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பகல் 11.30 மணிக்கு அங்கிருந்து விலகிச் சென்றனர்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** – நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்ப்பார்த்த உதவி கிடைக்கும், வீடு, வாகன லாபங்கள் அமையும்.

**ரிஷபம்** – சமயோசிதமான புத்தியால் அனைத்தையும் சாதிப்பீர்கள், அவசிய செலவுகளை செய்வீர்கள்.

**மிதுனம்** – பேச்சினால் பிழைப்பவர்களுக்கு புகழ், கௌரவம் உண்டு, அரச வகையில் நன்மைகள் உண்டு.

**கடகம்** – போட்டிப் பந்தயங்களில் வெற்றிவாகை சூடுவீர்கள், திடீர் தன வரவு ஏற்படும்.

**சிம்மம்** – வீண் டென்ஷால் குழம்பித் தவிப்பீர்கள், உடல் நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

**கன்னி** – தரும சிந்தனையுடன் செயலாற்றுவீர்கள், நினைத்தது நடக்கும், லாபம் உண்டு.

**துலாம்** – தொழில்துறையில் சாதனை படைக்கும் நாள், முக்கியமான சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சகம்** – சுப செய்தியால் ஆனந்தமடைவீர்கள், எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய நாள்.

**தனுசு** – மௌனம் காத்து, ஆலய வழிபாடு செய்வதால் மன நிம்மதி உண்டு, தூரப் பயணங்கள் வேண்டாம்.

**மகரம்** – அவசர முடிவுகள் எதையும் எடுக்காமல் இருப்பது நல்லது, பெண்களால் உதவிகள் உண்டு.

**கும்பம்** – கோபங்களை அடக்கிக் கொள்வதால் வீண் பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ளலாம், செலவுகள் அதிகம்.

**மீனம்** – தெளிந்த மனதுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள், அதிஷ்ட வாய்ப்புகள் நிறைந்த நன்நாள்.

**திதி** : தசமி பி.இ.1.59 வரை பின் ஏகாதசி

**நட்சத்திரம்** : பூசம் பி.இ.1.57 வரை பின் ஆயிலியம்

**யோகம்** : மரண யோகம் (சுப காரியம் நன்மை இல்லை)

**வார சூலை** : தென்கிழக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 6.09 - 7.09 மணி வரை

**ராகு காலம்** : 10.39 – 12.09 மணி வரை

**எமகண்டம்** : 3.09 - 4.39 மணி வரை

**குளிகை** : 7.39 - 9.09 மணி வரை

**சந்திராஷ்டமம்** : தனு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : புனர்பூசம்,விசாகம், பூரட்டாதி(பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** : ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களுக்கு தூதரகப் பாதுகாப்பு இல்லங்களில் அனுமதியில்லை




வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்யாமல் மற்றும் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு வேலைக்காக செல்லும் பெண்கள் ஏப்ரல் முதலாம் திகதிமுதல் தூதரகப் பாதுகாப்பு உத்தியோகபூர்வ இல்லங்களில் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்களுக்காக வெளிநாட்டுத் தூதரகங்களின் தொழிலாளர் நலப் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பான இல்லங்கள் நிறுவப்பட்டு, தூதரகங்களுக்கு வரும் பெண்களுக்குத் தேவையான நலன்புரி வசதிகள் மற்றும் குடியிருப்பு வசதிகளை வழங்குகின்றன. அவர்கள் வெளிநாட்டில் பணிபுரியும்போது பல்வேறு சேவைகளைப் பெறுவதற்கு குறித்த பாதுகாப்பு இல்லங்கள் உதவுகின்றன.

சட்டப்பூர்வ வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு செல்லும் பெண்களுக்காக மாத்திரமே இந்த தங்குமிடங்கள் நிறுவப்பட்டுள்ளன, ஆனால், தற்போதுவரை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பணியகத்தில் பதிவுசெய்யாமல் வெளிநாடு சென்ற பெண்களுக்குத் தேவையான அனைத்து நலன்புரி வசதிகளையும் வழங்கியுள்ளது.

நாட்டில் சமீபத்திய நாட்களில் சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு பொலிஸாரின் உதவியைப் பெறவேண்டிய நிகழ்வுகள் பல ஊடகங்களால் வெளிவந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வதை ஊக்குவிப்பதற்காகவும், பல்வேறு தரகர்கள் மற்றும் சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் தலையீட்டின் மூலம் வெளிநாட்டு வேலைகளுக்கு பெண்கள் செல்வதைக் கட்டுப்படுத்தவும் இந்த முடிவு எட்டப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

# கொழும்பில் பஸ் குண்டுவெடிப்புக்கு முயற்சித்த வழக்கில் தமிழ் அரசியல் கைதிக்கு ஆயுள்தண்டனை!

2008ஆம் ஆண்டு மட்டக்குளியிலிருந்து மொரட்டுவை நோக்கி பயணித்த பஸ்ஸில் வெடிகுண்டு வைத்து கொலைசெய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் (29) கடுங்காவல் ஆயுள்தண்டனை விதித்தது.

வழக்கின் இரண்டாவது குற்றவாளி, விசாரணையின் தொடக்கத்திலிருந்து நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. குற்றவியல் நடைமுறையின் 241ஆவது பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லாத நிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டது.

அவருக்கு கடுங்காவல் ஆயுள்தண்டனையும் விதிக்கப்பட்டதுடன், அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

நீண்ட விசாரணையின் பின்னர், சந்தேகத்திற்கு இடமின்றி குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரச தரப்பு நிரூபித்துள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க குறிப்பிட்டார்.

இதன்படி குற்றஞ்சாட்டப்பட்ட நாகலிங்கம் நடனசேகர மற்றும் தர்மலிங்கம் ஜயந்த ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்தது.

நகரமண்டபம் பகுதியில் வெடிகுண்டு இருந்ததாக சந்தேகிக்கப்படும் பார்சலை பஸ் நடத்துனர் அடையாளம் கண்டு, பஸ்ஸை பிரதான வீதியிலிருந்து அகற்ற உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதால், வெடிகுண்டு காரணமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

## கந்தப்பளையில் வீட்டைவிட்டுச் சென்ற நான்கு பிள்ளைகளும் நீர்கொழும்பில்

### பொலிஸாரிடம் தந்தை தெரிவிப்பு

(ஆ.ரமேஸ்)

கந்தப்பளையில் வீட்டைவிட்டுச் சென்ற நான்கு பிள்ளைகளும் நீர்கொழும்பில் உறவினர்களின் பாதுகாப்பில் இருப்பதாக அந்தப் பிள்ளைகளின் தந்தை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கந்தப்பளை ஹைபொரெஸ்ட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெரிகோல்ட் தோட்டத்தில் நான்கு பிள்ளைகள் எங்கு செல்கிறோம் என்று தந்தையிடம் சொல்லாமல் வீட்டைவிட்டு சென்றதாக பிள்ளைகளின் தந்தை ஹைபொரஸ்ட் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று (30) தெரிவித்தார்.

இவ்வாறு தந்தையிடம் சொல்லாமல் சென்ற பிள்ளைகள் தொடர்பில் பிள்ளைகளின் தந்தை மற்றும் பொலிஸார் தேடுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், தனது பிள்ளைகள் தன்னிடம் சொல்லாமல் சென்றுவிட்டதாகவும் இவர்களை அழைத்து வந்தவுடன் இவர்களுக்கு புத்திமதி சொல்லி தன்னுடன் இருக்க பொலிஸாரை கேட்டுக்கொள்வதாகவும் தந்தை பொலிஸாருக்கு தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (29) மாலை குறித்த பிள்ளைகளின் தந்தை தனது பிள்ளைகள் நீர்கொழும்பில் தனது உறவினர் ஒருவரின் வீட்டில் இருப்பது தெரியவந்துள்ளது எனவும் அவர்களை அழைத்து வந்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் தந்தை ஹைபொரெஸ்ட் பொலிஸ் நிலையத்தில் பிள்ளைகள் நீர்கொழும்பில் இருப்பது தொடர்பில் சட்டரீதியான வாக்குமூலம் இதுவரை வழங்கவில்லை. ஆகையால் பிள்ளைகளை அழைத்து வந்ததன் பின்னர் முறையாக விசாரணைகள் செய்து வாக்குமூலம் பெறப்படும் என நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மெரிகோல்ட் தோட்டத்தில் வசித்துவந்த 19 வயது யுவதியும் 14, 13 வயதுடைய சிறுமிகளும் 12 வயதுடைய சிறுவனுமே இவ்வாறு வீட்டைவிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மறைந்த ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடலுக்கு பாராளுமன்றத்தில் அஞ்சலி







இலங்கை பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரும், அமைச்சருமான மறைந்த ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடலுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று (30) பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அதேபோன்று, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரும், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மேலும், முன்னாள் ஜனாதிபதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களுமான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்ரிபால சிறிசேன, பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகக் கலந்துகொண்டனர்.

அவர்களுக்கு மேலதிகமாக இராஜதந்திர அதிகாரிகள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க உள்ளிட்ட செயலாளர் குழு, பாராளுமன்ற செயலகத்தின் பணியாளர்கள், முன்னாள் பணியாளர்கள், பாராளுமன்றத்துடன் இணைந்த ஏனைய பணியாளர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

மறைந்த ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடல் தாங்கிய வாகனத் தொடரணி நேற்று காலை 09.00 மணிக்கு பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலை வந்தடைந்தபோது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹனதீர ஆகியோரால் பூதவுடல் பொறுப்பேற்கப்பட்டது.

பின்னர் படைக்கலசேவிதர், பிரதி படைக்கலசேவிதர், உதவிப் படைக்கலசேவிதர் ஆகியோர் முன்னால் செல்ல பூதவுடல் செங்கம்பளத்தின் ஊடாக பாராளுமன்ற விசேட வைபவ மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அதனையடுத்து, சபாநாயகர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் மைக்கல் பெரேராவின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் இரங்கல் அறிக்கையையும் பதிவுசெய்தனர்.


# Adrian Zecha உடனான கூட்டமைப்பை Hunas Holdings PLC நிறுவனம் அறிவிக்கிறது

மீளவும் எழுச்சி அடையும் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு ஓர் உற்சாகமான சாதகமான நிகழ்வாக இலங்கையின் புகழ்பெற்ற பல தலைமுறைகளின் அபிமானத்தை வென்ற Hunas Falls Hotelஇன் தாய் நிறுவனமான Hunas Holdings PLC நிறுவனம், 'Hotelier of the Century' என அறியப்படும் Adrian Zechaஇனால் நிர்வகிக்கப்படும் Azotels நிறுவனத்துடன் ஒரு முக்கிய கூட்டாண்மையை அறிவித்துள்ளது.


இந்தக் கூட்டாண்மை மூலம் Azotels நிறுவனமானது தற்போதைய Hunas Falls Hotel இனை வில்லாக்களுடன் கூடிய உயர்தர சொகுசு ஹோட்டலாக மேம்படுத்துவதோடு, இந்த ஸ்தாபனத்தின் நிர்வாகத்தையும் கையாண்டு உலகின் சிறந்த ஹோட்டல்களின் வரிசையில் இடம்பிடிப்பதை உறுதிசெய்யும்.

Hunas Falls Hotels PLC என முன்னர் அறியப்பட்ட Hunas Holdings PLC நிறுவனமானது விருந்தோம்பல் சுற்றுலா ஆதனத்துறை, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தேயிலைத் தோட்டங்கள், தொழிற்சாலைகள் மற்றும் தேயிலை தரகு ஆகியவை உள்ளடங்கிய ஐந்து துறைகளில் முன்னிலை வகிக்கும் ஒரு பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனமாகும். Hunas Holdings PLC நிறுவனமானது, நிலைத்தன்மையின் மீது தனது கவனத்தை செலுத்தி தொடர்ந்தும் முன்னேறி வருகிறது.

அத்தோடு, முன்னேற்றமும் பாதுகாப்பும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை என்பதையும் Hunas Holdings PLC நிறுவனம் அறிந்துள்ளது. இது இந்நிறுவனத்தின் நிலைகுலையாத தொலைநோக்குப் பார்வை மற்றும் அயராத முயற்சிகளுக்குச் சான்றாகும்.







Hunas Holdings PLC நிறுவனத்தின் தலைவர் தனுக சமரசிங்க இந்த பங்காளித்துவத்தின் முக்கியத்துவம் பற்றி பேசுகையில், 50 ஆண்டுகால நினைவுகளைக் கொண்டாடும் Hunas Falls Hotelக்கு இந்த கூட்டாண்மை ஒரு முக்கியமான மைல்கல்லாகும். Hunas Falls Hotel இலங்கையின் மிகவும் அழகான சொத்து என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம். இதனடிப்படையில் விருந்தோம்பல் துறையில் 50 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் தொழில்துறையில் எப்போதும் அதிகரித்துவரும் ஆர்வத்துடன் செயல்படும் ஸெக்காவுடன் இணைந்து பணியாற்றுவது ஒரு பெருமையான விடயம் என நான் கருதுகிறேன்.

Hunas Falls Hotelஇல் இயற்கை சூழல், கலாசாரம், கட்டிடக்கலை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றும் பரஸ்பர தொலைநோக்குப் பார்வையை ஸெக்காவுடன் நாமும் பகிர்ந்து கொள்கிறோம். அதேநேரத்தில் விருந்தினர்களுக்கு ஒரு நேர்த்தியானதும் மறக்க முடியாததுமான அனுபவத்தை வழங்குவதையும் நாம் நோக்கமாகக்கொண்டுள்ளோம். இந்த ஒற்றுமையின் முக்கிய நெறிமுறையானது விருந்தோம்பல் சார்ந்த நலன்களுக்கு அப்பாற்பட்டதோடு மட்டுமல்லாது, இந்த நெறிமுறையினை எங்களது வணிகத்தின் அனைத்து அம்சங்களிலும் நடைமுறைப்படுத்த நாங்கள் முயற்சி செய்கிறோம். எனவே, இந்த கூட்டாண்மையை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதோடு, ஸெக்காவின் தொலைநோக்குப் பார்வையின் வழிநடத்தலின்கீழ் Hunas Falls அனுபவத்தை மாற்றுவதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்."

விருந்தோம்பல் துறையில் 5 தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்துடன் Forbes இதழில் நூற்றாண்டின் ஹோட்டலியர் (Hotelier of the Century) என்ற நன்மதிப்பு மிக்க அங்கீகாரத்தையும் பல பாராட்டுகள் மற்றும் தனித்துவமான வாழ்நாள் சாதனைகளையும் பெற்றுள்ள ஏட்ரியன் ஸெக்கா விருந்தோம்பல் துறையில் ஒரு மூத்த முன்னோடியாவார். சொகுசு பூட்டிக் வில்லா கருத்தாக்கத்தின் முன்னோடியான இவர், இயற்கை அழகு கட்டடக்கலை, பாரம்பரியம், கலாசார பன்முகத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றை சிரமமின்றி தனது தனித்துவமான பாணியில் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு ஹோட்டல்களின் மூலம் இணைக்கிறார்.

ஸெக்காவின் பட்டியலில் காணப்படும் ஹோட்டல்களில் அவரது தனித்துவ ரீதியில் பிரபலம் பெற்ற வர்த்தக நாமமான Aman Resortsஉம் அடங்கும். இது அதன் விருது பெற்ற வடிவமைப்புகள், அசாத்தியமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள நிலைகள், வாழ்க்கைமுறை கூறுகள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக அவரது விருந்தினர்களுக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான தனிப்பட்ட சேவைக்காக குறிப்பிடத்தக்க வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Hunas Holdings மற்றும் Azotels நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டமைப்பானது உலகளாவிய சுற்றுலாத்துறையில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகச்சிறந்த நன்மதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுவதோடு, இலங்கையை ஒரு தனித்துவமான ஆடம்பர சுற்றலாத்தலமாக மீளவும் நிலைப்படுத்துகிறது.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, மார்ச் 31ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# கவனிக்கப்படவேண்டிய காலநிலை மாற்றம்!

காலநிலை மாற்றத்துக்கான அனைத்துலக அரசுக் குழுவின் (IPCC) 58ஆவது மாநாடு, சுவிட்சர்லாந்தின் இண்டர்லாகன் நகரில் கடந்த 19ஆம் திகதி நடந்து முடிந்திருக்கிறது. இதில் அனைத்துலக குழுவின் ஆறாவது காலநிலை அறிக்கையின் (Sixth Assessment Report) நான்காவதும் இறுதியுமான பகுதி வெளியிடப்பட்டிருக்கிறது.

காலநிலை மாற்றத்தின் அறிவியல், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளும் அதை எதிர்கொள்ளும் வழிமுறைகளும், காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் ஆகிய மூன்று தலைப்புகளில் முந்தைய அறிக்கைகளை 782 விஞ்ஞானிகள் இணைந்து தயாரித்துள்ளனர். இந்த மூன்று அறிக்கைகளின் ஒருங்கிணைந்த கருத்துகள், முடிவுரை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்துறை அறிவியலாளர்களும் நிபுணர்களும் இணைந்து தயாரித்திருப்பது இதன் சிறப்பம்சம். முந்தைய அறிக்கைகளின் ஒருங்கிணைந்த வடிவம் என்றாலும், இதில் சில கூடுதலான கணிப்புகளும் தெளிவான வழிமுறைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 2023 நவம்பரில் டுபாயில் நடக்கவிருக்கும் காலநிலை உச்சி மாநாட்டுக்கு (COP28) இந்த அறிக்கையின் தரவுகளே அடிப்படையாக அமையும் என்பதால், இதன் முக்கிய அம்சங்களைப் புரிந்துகொள்வது அவசியம்.

கரிம உமிழ்வு இப்போதைய நிலையிலேயே தொடரும் பட்சத்தில், 2040ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய சராசரி வெப்பநிலை 1.5 பாகை செல்சியஸை எட்டுவதற்கு 50 வீத வாய்ப்புண்டு என்று விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள். இது இன்னும் விரைவாக - அதாவது 2037க்குள்ளாகவே நிகழலாம் என்றும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது. பரிஸ் ஒப்பந்தம் உள்ளிட்ட பல உலகளாவிய ஒப்பந்தங்களும் பேச்சுவார்த்தைகளும் எதிர்பார்த்த அளவுக்குச் செயற்படுத்தப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது.

காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வு ஓரளவு அதிகரித்திருப்பதை இந்த அறிக்கை அங்கீகரிக்கிறது. காலநிலை மாற்றம் பற்றிய தங்களது ஆவணங்களில், அதை எவ்வாறு சமாளிப்பது என்கிற வழிமுறைகளையும் உலக நாடுகள் குறிப்பிடத் தொடங்கியிருக்கின்றன.

இதை வரவேற்பதாகக் கூறும் விஞ்ஞானிகள், இந்த வழிமுறைகள் ஒழுங்கமைவுடன் இல்லை என்றும் கவலை தெரிவிக்கின்றனர். பல்வேறு துறைகளின் ஊடாக இந்த வழிமுறைகள் உருவாக்கப்பட்டு, தொடர் செயற்பாடுகளாக அவை பரந்துபட்டிருக்க வேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி முறைகளான சூரிய ஒளி மின்சாரம், காற்றாலை மின்சாரம் ஆகியவற்றில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. குறிப்பாக, இவற்றின் செலவு குறைந்திருப்பதாகவும், இவற்றின் பயன்பாட்டு விகிதம் அதிகரித்திருப்பதாகவும் காலநிலை அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அனைவருக்கும் கொண்டுசெல்ல இன்னும் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரைக்கின்றனர். நகர்ப்புறப் பசுமை உள்கட்டமைப்பு, ஆற்றல் செயல்திறன், உணவு வீணாவதைக் குறைப்பது, பயிர் மேலாண்மை ஆகியவற்றில் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தின் நீண்ட காலப் பாதிப்பு, இதுவரை கணக்கிடப்பட்டுள்ளதைவிடப் பல மடங்கு மோசமானதாக இருக்கலாம் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது. வெப்பநிலை அதிகரிக்க அதிகரிக்க, பாதிப்புகளின் விகிதம் ஒரு பெருக்கல் தொடரைப் போல (Geometric Progression) அதிகரிக்கும் என்று இதை நாம் புரிந்துகொள்ளலாம். ஒரு பாகை அதிகரித்தால் 10 மடங்கு பாதிப்பு என்றால், இரண்டு பாகை அதிகரித்தால் 20 மடங்கு என பாதிப்புகளை ஒரே நேர்க்கோட்டில் அணுக முடியாது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

காலநிலைச் செயற்பாட்டின் வேகத்தை அதிகரிப்பதற்கான மூன்று முக்கிய தேவைகளாக நிதி, தொழில்நுட்பம், சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றை இந்த அறிக்கை பட்டியலிடுகிறது. சர்வதேச ஒத்துழைப்பு இருக்குமா? ஒருவேளை இருந்தாலும் அது எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதையே நிதிதான் தீர்மானிக்கிறது.

பெரும்பாலான காலநிலை மாநாடுகளில் நிதி தொடர்பான விவாதங்களில்தான் அதிகமான முரண்களும் சர்ச்சைகளும் ஏற்படுகின்றன. தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை, வளங்குன்றாச் செயற்பாடுகளுக்கான தொழில்நுட்பம், கரிம உறிஞ்சு தொழில்நுட்பம் என்று பலவற்றைக் குறிப்பிடலாம். இவற்றிலும் நிதி ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. ஆகவே, வேறு எல்லாவற்றையும்விட காலநிலைச் செயற்பாடுகளுக்கு நிதி ஒரு முதன்மையான தடைக்கல்லாக இருந்துவருகிறது.

வளர்ந்த நாடுகள் நிதியளிப்புக்குப் பொறுப்பெடுத்துக் கொள்வதில்லை என்பது பல ஆண்டுகளாக இருக்கும் குற்றச்சாட்டு. அதற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. யாருக்கு யார் நிதி வழங்குவது என்ற விவாதமே பெரும்பாலான காலநிலை மாநாடுகளின் ஒப்பந்தத்தைச் சீர்குலைத்துவிடுகிறது.

காலநிலை மாற்றத்தால் வரும் பேரிடர்களை சமாளிக்க, சூழலியல் மண்டலத்தை அடிப்படையாகக் கொண்ட தகவமைப்புகளை (Ecosystem based adaptation) இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது. உதாரணமாக, நிலச்சரிவுகளைக் குறைக்க காடழிப்பைத் தடுப்பது, சதுப்புநிலங்களை மீட்டெடுப்பதன் மூலம் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவது, கடல்நீர் உட்புகுதல், கடலோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்றின் பாதிப்பு ஆகியவற்றைத் தடுக்க அலையாத்திக் காடுகளை மீட்டெடுப்பது போன்ற பல்வேறு செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

இவை தவிர, ஒரு சில பேரிடர்களுக்கு எந்தத் தகவமைப்புமே உதவாது என்று இந்த அறிக்கை வெளிப்படையாகவே அறிவிக்கிறது. அந்தந்த நாடுகள் இவற்றுக்கான தயார் நிலையில் இருக்க வேண்டியதும் அவசியம்.

காலநிலை ஒப்பந்தங்களின்போது அறிவிக்கப்படும் சில வாக்குறுதிகளை உண்மையாகவே நடைமுறைப்படுத்துவதில் நாடுகள் முனைப்பாக இருக்க வேண்டும் என்று இந்த அறிக்கை வலியுறுத்துகிறது. கரிமத் தொழில்நுட்பங்கள் பற்றி இதில் அதிகமாகப் பேசப்பட்டிருப்பது கவனத்துக்குரியது.

காலநிலை மாற்றத்தின் தீவிரம் முன்னெப்போதையும்விட அதிகமாகியிருக்கிறது. உலகம் தொடர் பேரிடர்களால் பாதிக்கப்படுகிறது. சிறிய முரண்களால் வேறுபடாமல் மனித இனத்தின் எதிர்காலத்தைக் காப்பதற்கு உலக நாடுகள் ஒன்றுகூட வேண்டும் என்று இந்த அறிக்கை தெளிவாக வலியுறுத்துகிறது. அதற்குக் காதுகொடுப்பதா வேண்டாமா என்பது உலக நாடுகளின் கையில்தான் இருக்கிறது.

உலகின் வெவ்வேறு பகுதிகளில் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள், வெவ்வேறு தலைமுறையினர் காலநிலை அவசரநிலையால் சந்திக்கப்போகும் அழிவுகள் ஆகியவை படங்களாக இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவற்றை, 'மனிதத் துயரங்களின் வரைபடம்' என்று வர்ணிக்கும் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரஸ், "எல்லா இடங்களில் இருப்பவர்களும் ஒருசேர, எல்லா விதமான காலநிலை செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். இதுவே இந்த அறிக்கையை அமுல்படுத்துவதற்கான அறைகூவல்" என்று தெரிவித்திருக்கிறார். உலகின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் காலநிலை மாற்ற விடயத்தில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டியது கட்டாயம்.

# வடக்கு - கிழக்கிற்கு தமிழ்த் தேசிய முகவரி கொடுத்த தந்தை செல்வா



தந்தை செல்வாவின் 135ஆவது பிறந்தநாள் இன்றாகும் (மார்ச் 31). அவரின் பிறப்பு பதிவுப்பெயர் செல்வநாயகம். அவர் 1898 மார்ச் 31 இல் மலேசியாவின் ஈப்போ நகரில் ஜேம்ஸ் விசுவநாதன் வேலுப்பிள்ளை, ஹரியட் அன்னம்மா ஆகியோருக்கு முதலாவது மகனாகப் பிறந்தார்.

செல்வநாயகத்தின் தந்தை யாழ்ப்பாணம் தொல்புரம் என்ற இடத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியர். மலேசியாவுக்குக் குடிபெயர்ந்து வர்த்தகர் ஆனார். இவரது குடும்பம் பின்னர் தைப்பிங் நகருக்கு இடம்பெயர்ந்தது. செல்வநாயகத்தின் சகோதரர்கள் ஏர்னெஸ்ட் வேலுப்பிள்ளை பொன்னுத்துரை (பிறப்பு 1901), எட்வர்ட் ராஜசுந்தரம் (பிறப்பு 1902) ஆகியோராவர். தங்கை அற்புதம் இசபெல் இளம் வயதிலேயே இறந்து விட்டார். செல்வநாயகம் 4 வயதாக இருக்கும்போது, தாய், சகோதரர்களுடன் இலங்கை திரும்பினார்.

செல்வநாயகம் குடும்பத்துடன் யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழையில் வாழ்ந்து வந்தார். செல்வநாயகம் தனது ஆரம்பக் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பின்னர் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியிலும் கற்றார். பின்னர் கொழும்பு சென்று புனித தோமையர் கல்லூரியில் கல்வி கற்றார். இவருடன் இக்கல்லூரியில் படித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் முக்கியமான ஒருவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த பிரதமராக செயல்பட்ட சொலமன் பண்டாரநாயக்கா ஆவார்.

செல்வநாயகம் லண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராகப் படித்து தனது 19ஆவது அகவையில் அறிவியலில் இளமாணிப் பட்டம் பெற்றார்.

பட்டப்படிப்பு முடிந்தவுடன் புனித தோமையர் கல்லூரியில் ஆசிரியத் தொழிலில் இணைந்தார். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அவரது சகோதரர் கடுமையான சுகயீனமுற்றிருக்கிறார் எனக் கேள்விப்பட்டு உடனடியாகத் தாயைப் போய்ப் பார்க்க விரும்பி விடுமுறை கேட்டார். ஆனால், அவரது வேண்டுகோள் கல்லூரி அதிபரால் மறுக்கப்பட்டதை அடுத்து அவர் ஆசிரியப் பதவியில் இருந்து விலகினார். பின்னர் கொழும்பு வெஸ்லி கல்லூரியில் ஆசிரியரானார். ஆசிரியப் பணியில் இருந்தபோதே இலங்கை சட்டக் கல்லூரியில் கல்வி கற்று 1923இல் சட்ட அறிஞராக வெளியேறினார். 1927இல் எமிலி கிரேஸ்பார் குமாரகுலசிங்கம் என்பவரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு சுசிலி என்ற மகளும், செ.சந்திரகாசன், செ.வசீகரன் என இரு மகன்களும் உள்ளனர்.

வெஸ்லி கல்லூரியில் பணியாற்றும்போது அவர் தமிழ்த் தேசிய உடையை அணிகிறார் எனக் குற்றஞ்சாட்டி அவரை ஆசிரியர் பதவியில் இருந்து விலக்கினர். செல்வநாயகம் பின்னர் நீண்ட காலம் மிகவும் புகழ்வாய்ந்த குடிசார் வழக்கறிஞர்களில் ஒருவராக விளங்கினார்.

ஒரு குடிசார் வழக்கறிஞரான இவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையின்கீழ் இருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் 1944 ஓகஸ்ட் 29இல் இணைந்து அரசியலில் பணியாற்றினார். இலங்கை விடுதலை பெற்ற பின்னர் அமைந்த முதல் அரசாங்கத்தில் சேர்வது மற்றும் இலங்கை இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டம் முதலியன பற்றி எழுந்த கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து, வேறு சில தலைவர்களுடன் சேர்ந்து கட்சியை விட்டு விலகிய செல்வநாயகம் 1949 டிசம்பர்18 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்.

தமிழ்த் தேசிய அரசியலின் தாய்க்கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பதை செயல்கள் மூலம் நிரூபித்த தந்தை செல்வா வடக்கு - கிழக்கு இணைந்த தாயகமாக செயல்படவேண்டும் என்ற எண்ணத்தை தனது மனதில் நிறுத்தி சமஷ்டி அடிப்படையிலான சுய ஆட்சி ஒன்றே இணைந்த வடக்கு - கிழக்கு தாயகத்திற்கு உகந்தது என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடிப்படைக்கொள்கையாக ஏற்று செயல்பட்டார்.

தமது அரசியல் செயல்பாட்டை வடக்கு மாகாணத்துடன் மட்டும் மட்டுப்படுத்தாமல் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய அரசியலை விஸ்தரிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேரடியாக 1956ஆம் ஆண்டு சென்று மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் செல்லையா இராசதுரை என்பவரையும், பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் சி.மூ.இராசமாணிக்கத்தையும் இனம்கண்டு இலங்கைத் தமிழ் அரசியல் கட்சியில் உள்வாங்கினார்.

இதன்மூலம் 1956 தொடக்கம் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய அரசியல் கூர்மை பெற்று தமிழ்த் தலைவர்கள் மட்டுமன்றி, இஸ்லாமிய அரசியல் தலைவர்களையும் கிழக்கு மாகாணத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைத்து தமிழ்பேசும் மக்கள் என்ற சொல்லாடல் மூலம் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையைக் கட்டிவளர்த்தார்.

தந்தை செல்வா 1956இல் மட்டக்களப்புக்கு வருகை தந்து தமிழ்த் தேசிய அரசியலுக்கு அத்திவாரம் இடாமல் இருந்திருந்தால், இன்று கிழக்கு மாகாணம் பேரினவாதிகளுடைய சிங்களக் கட்சிகளிடம் சோரம்போய் தமிழை மறந்து மண்ணை மறந்து தமிழ் இன, மான உணர்வை இழந்தவர்களாக கிழக்கு மாகாண மக்கள் வாழ்ந்திருப்பார்கள் என்ற உண்மையை அனைவரும் தந்தை செல்வாவின் 135ஆவது பிறந்த நாளில் புரிவது காலத்தின் கட்டாயம்.

தந்தைசெல்வா 1898 மார்ச் 31இல் பிறந்து 1977 ஏப்ரல் 26இல் மரணித்தாலும் அவர் விட்டுச்சென்ற தமிழ்த்தேசிய அரசியலை முன்னகர்த்துவதே அவருக்கு நாம் செலுத்தும் பிறந்தநாள் நினைவாகவும் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகவும் அமையும்.

**பா.அரியநேத்திரன்**











பேருவளை கெச்சிமலை அஷ்ரபியா அரபுக் கல்லூரியின் 9ஆவது பட்டமளிப்பு விழா கலாபீட வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. சங்கைக்குரிய அஷ்செயஹ் ஸக்கி அஹமத் ஆலிம் (அஷ்ரபி) இப்னு அஷ்செய்ஹ் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் கலாநிதி அஷ்செய்ஹ் பக்கீர் ஜவ்பர் பிரதம அதிதியாகவும் சவூதி அரேபிய தூதரக முதலாவது செயலாளர் சங்கைக்குரிய காலித் மக்கி கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர். 2019, 2020, 2022, 2023ஆம் ஆண்டுகளில் பரீட்சை எழுதி சித்தியடைந்த 23 பேருக்கு விழாவில் மௌலவி பட்டத்திற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.


இந்நிகழ்வில் கலாபீட அதிபர், மௌலவி எம்.ஆர்.எம் ஸில்மி (நூரி – அல் அஸ்ஹரி) உட்பட பலரும் உரை நிகழ்த்தியதுடன், இலங்கை வக்பு சபைத் தலைவர், கலாபீட விரிவுரையாளர்கள், உலமாக்கள், அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், பிரமுகர்கள் உட்பட பலரும் பங்குபற்றினர்.

முஸ்லிம் விவாகப் பதிவாளர் மௌலவி எம்.எஸ்.எம் பாஸில் (ஜே.பி) – அல் அஷ்ரபி நன்றியுரை நிகழ்த்தியதோடு, சீனன் கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (பீ.ஏ. – அஷ்ரபி) துஆப் பிராத்தனை நடத்தினார்.

அஷ்ரபியா கலாபீடம் அலவிய்யாத் தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் மர்ஹும் சங்கைக்குரிய அஷ்செய்ஹ் முஹம்மத் ஹம்ஸா ஆலிம் பின் அஷ்செய்ஹ் அப்துல்லாஹ் ஆலிம் அலவியதுல் காதிரியினால் ஸ்தாபிக்கப்பட்டதோடு, கடந்த பல வருடங்களாக நூற்றுக்கணக்கான உலமாக்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ***(பேருவளை பீ.எம்.முக்தார்)***

## தவக்கால சிந்தனை

### "என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள்"



அக்காலத்தில் இயேசுவின் மேல் எறிய யூதர்கள் மீண்டும் கற்களை எடுத்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, "தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள் முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச்செயலுக்காக என்மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார்.

யூதர்கள் மறுமொழியாக, "நற்செயல்களுக்காக அல்ல, இறைவனைப் பழித்துரைத்ததற்காகவே உன்மேல் கல்லெறிகிறோம். ஏனெனில், மனிதனாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய்" என்றார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து, "மறைநூலில் கூறியபடி கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். மறைநூல் வாக்கு என்றும் அழியாது. அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை இறைமகன் என்று சொல்லிக் கொண்டதற்காக இறைவனைப் பழித்துரைக்கிறாய் என நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்பவேண்டாம். ஆனால், நான் அவற்றைச் செய்தால், என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள். அதன்மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள்" என்றார்.

இதைக் கேட்டு அவர்கள் அவரை மீண்டும் பிடிக்க முயன்றார்கள். ஆனால், அவர்கள் கையில் அகப்படாமல் அவர் அங்கிருந்து சென்றார்.

யோர்தானுக்கு அப்பால் யோவான் முதலில் திருமுழுக்குக் கொடுத்துவந்த இடத்திற்கு இயேசு மீண்டும் சென்று அங்கு தங்கினார். பலர் அவரிடம் வந்தனர். அவர்கள், "யோவான் அடையாளம் எதையும் செய்யவில்லை. ஆனால், அவர் இவரைப் பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையாயிற்று" எனப் பேசிக்கொண்டனர். அங்கே பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

## நக்கல் நமசிவாயம்

எரிபொருள் விலைகள குறைச்சதில புதுமையில்லை... கூட்டின தொகையில் ஒரு சிறு அளவைக் குறைச்சிருக்கிறாங்கள்..! அவ்வளவுதான்..!



## இன்றைய நாளில்...

- 1885 – இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய வருடப்பிறப்பு நாட்கள் விடுமுறைகளாக அறிவிக்கப்பட்டன.
- 1959 – திபெத்தின் 14ஆவது தலாய் லாமாவான டென்சின் கியாட்சோ, எல்லையைக் கடந்து, இந்தியாவினுள் நுழைந்து, அரசியல் புகலிட உரிமை கோரினார்.
- 1966 – சோவியத்தின் லூனா-10 விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இதுவே சந்திரனின் சுற்றுவட்டத்தை வலம்வந்த முதலாவது விண்கலமாகும்.
- 1970 – 12 ஆண்டுகள் விண்வெளியில் களித்த எக்ஸ்புளோரர்-1 விண்கலம் புவியின் வளிமண்டலத்தினுள் வந்தது.
- 1990 – இந்திய அமைதிப்படை ஈழத்திலிருந்து முற்றாக விலக்கப்பட்டது.

# இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய விக்கிரகங்கள் காணாமல் போயுள்ளன

## இராணுவத்தினருக்கு தொடர்பிருப்பதாக நிர்வாகத்தினர் சந்தேகம்

பலாலியில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த பழமை வாய்ந்த இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் விக்கிரகங்கள் சூறையாடப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் (29) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் காணப்பட்ட விக்கிரகங்கள் இரண்டினை காணவில்லை என ஆலய பரிபாலன சபைத் தலைவர் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவுசெய்துள்ளார்.

அத்துடன் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திலும் விக்கிரகங்கள் காணாமல் போயுள்ளமை சம்பந்தமாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது, 1846ஆம் ஆண்டு அம்மன் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அங்கே ஒவ்வொரு கடவுள்களின் விக்கிரகங்களும் வைக்கப்பட்டிருந்தன. அன்றைய காலம் தொடக்கம் உற்சவக் காலங்களில் பூஜை வழிபாடுகள் நடைபெற்று வந்தன.

பின்னர் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி எமது கிராமத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது கிராம மக்கள் வெளியேறி யாழ்குடா நாட்டில் உள்ள பல பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர்.

வாழ்ந்துவரும் காலத்தில் 2002ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சராக இருந்த மகேஸ்வரனாலும் எமது கிராம மக்களின் முயற்சியினாலும் இந்த ஆலயத்திற்கு சென்று வரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு மே மாதம் மட்டும் இந்த ஆலயத்துக்கு சென்று வந்தபோதும் நல்ல நிலையிலே ஆலயம் இருந்தது. ஆலய விக்கிரகங்களும் இருந்தன.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி மீண்டும் இந்த ஆலயத்துக்கு சென்றபோது விக்கிரகங்கள் எல்லாம் நல்ல நிலையிலே இருந்தன. தற்போது வரை இந்த ஆலயத்துக்கு விசேட தினங்களுக்கு சென்று வந்து கொண்டிருக்கின்றோம்.

அப்படி இருக்கின்றபோது இப்பொழுது 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி திருவெம்பாவை தினத்திற்கு சென்ற பொழுது முருகன் சிலை காணாமல் போயிருந்தது.

வடக்கின் மிகப்பெரும் இராணுவத்தளமாக விளங்குகின்ற பலாலி இராணுவத்தளத்தின் உயர் பாதுகாப்பு நிலையத்தில் அமைந்துள்ள குறித்த ஆலயத்தின் விக்கிரகங்கள் இராணுவத்தினருக்கு தெரியாமல் எவ்வாறு காணாமல் போயுள்ளன என நிர்வாகத் தலைவர்கள் கேள்வி எழுப்புகின்றார்.

24 மணத்தியாலங்களும் ஆலயத்தை சூழ உள்ள பகுதிகளிலும் பாதுகாப்புக் கடமையில் இராணுவம் ஈடுபட்டிருக்கின்றபோது நாம் பூஜை வழிபாடுகளுக்கு செல்வதற்கு கூட இராணுவத்தின் அனுமதியினை பெற்றுச் செல்கிறோம். இவ்வாறு நிலைமை இருக்கின்ற பொழுது, குறித்த விக்கிரகங்கள் படிப்படியாக காணாமல்போனமைக்கான பிரதான காரணம் என்ன? இது தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பதிலுக்காக காத்திருக்கிறோம் என்றார்.

இதற்கும் இராணுவத்திற்கும் தொடர்பு இருப்பதாகவும் தான் சந்தேகிப்பதாக ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.



அண்மைக்காலமாக பௌத்தமயமாக்கலின் அங்கமாக இடம்பெறும் கச்சதீவில் பௌத்த ஆதிக்கத்தினை மேற்கொண்டமை வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கேஸ்வரர் சிலையினை உடைத்தெறிந்தமை உள்ளிட்ட செயல்களின் தொடர்ச்சியாகவே பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் விக்கிரகங்களும் சூறையாடப்பட்டுள்ளனவா என சந்தேகம் எழுகின்றது - என்றார்.

# நீதிமன்ற கட்டளையை மீறி தொடரும் பௌத்தக் கட்டுமானம்; குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய வழக்கு ஒத்திவைப்பு

## நிலைமைகளை நேரடியாக பார்வையிட்டு தீர்ப்பை வழங்குமாறு கோரிய ஆலய நிர்வாகம்



விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் சார்பில் 02.03.2023அன்று நீதிமன்றில் முறையீடு ஒன்று செய்யப்பட்டது.

இந்நிலையில், குருந்தூர்மலை விவகாரத்தில் அவ்வாறு நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர் 30.03.2023ஆம் திகதியன்று நீதிமன்றில் தோன்றி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரணராஜா உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய குறித்த வழக்கானது முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று (30) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொல்லியல் திணைக்களம் சார்பில், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க உள்ளிட்ட குழுவினரும், பொலிஸாரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது தமது சிரேஷ்ட சட்டத்தரணிகளும், சிரேஷ்ட அலுவலர்களும் நீதிமன்றுக்கு வரமுடியாத காரணத்தினால், தமது விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிறிதொரு தவணையினை வழங்குமாறு பொலிஸாரும், தொல்பொருள் திணைக்களம் சார்ந்தவர்களும் நீதிமன்றிடம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்நிலையில் குருந்தூர்மலைப் பிரதேசத்திலே நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதானது, நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறுகின்ற செயற்பாடு என, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்தோடு பொதுமக்கள் நீதிமன்றின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடியதொரு செயற்பாடு எனவும் இதன்போது ஆலய நிர்வாகம் சார்பான சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

குருந்தூர் மலைப் பிரதேசத்திற்கு நீதவான் நேரடியாக வருகைதந்து அங்கு இடம்பெறும் விடயங்களை பார்வையிட்டு, ஏற்கனவே இருந்த நிலையைவிட புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதனைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் வலிதான பிணிக்கும் தன்மையுடைய கட்டளை ஒன்றினை வழங்கவேண்டுமெனவும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளால் வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், இருதரப்பு சமர்ப்பணங்களைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலிஸார் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக ஏப்ரல் 27ஆம் திகதி வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது.

# மருமகனின் கத்திக்குத்துக்கு இலக்காகி மாமியார் உயிரிழப்பு

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் பெண்ணொருவர் மருமகனின் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக கம்பஹா தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று பிள்ளைகளின் தாயான 57வயதுடைய லியனகே மேரி ஸ்வர்ணா என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். காணித் தகராறு காரணமாக நேற்று முன்தினம் (29) மாலை வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், காயமடைந்த பெண் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் மருமகனான 43 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சந்தேக நபர் கம்பஹா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் இரண்டாயிரத்து 230ஆம் நாள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(வட்டுக்கோட்டை நிருபர்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று (30) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த போராட்டம் நேற்று (30) காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க அலுவலகம் முன்பாக ஏ9 வீதியில் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறும், நீதி கோரியும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 2,230 நாட்கள் கடந்துள்ள நிலையில், சர்வதேசம் நீதி பெற்றுத்தர வேண்டும் என தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

குறித்த போராட்டத்தின்போது கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க தலைவி கதிர்காமநாதன் கோகிலவாணி குறிப்பிடுகையில்,

இலங்கை அரசு போராட்டங்களை நசுக்குவதற்கு பல்வேறு விடயங்களை கையாண்டு வருகின்றது. எமது போராட்டங்களை மாத்திரமல்ல, ஏனைய போராட்டங்களிற்கும் அவ்வாறே செயற்படுகின்றது.

விசாரணைகளிற் காக அழைப்பதும், நீதிமன்ற வழக்குகளை தொடருவதும் என தொடர்கின்றது.

இந்த நிலையில், எமது பிள்ளைகளிற்கு நீதி கோரி நாங்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். சர்வதேசம் எமக்கு இதற்கான நீதியை பெற்றுத்தர வேண்டும். இன்று நாம் ஏற்றுக் கொள்ளாத காணாமல் போனாருக்கான அலுவலகம் ஊடாக எமக்கு




அழைப்பு விடுக்கின்றனர்.2 இலட்சம் தருவதாக கூறுகின்றனர். அந்த 2 இலட்சம் எமக்கு வேண்டாம். மின்சாரம், நீர் பயன்பாட்டுக்கான கட்டணப் பட்டியலிற்கு செலவு அதிகம் எனக் கூறி கைத்துண்டு வழங்குகின்றனர். ஆனால், காணாமல்போனாருக்கான அலுவலகத்தில் பதிவுசெய்யுமாறு காகிதங்களை அனுப்புகின்றனர். ஜெனீவாவிற்கு பயந்து அரசாங்கம் இவ்வாறு செயற்படுகின்றது. எமக்கு 2 இலட்சம் வேண்டாம். நாட்டில் பொருளாதாரம் பிரச்சினையாக உள்ள நிலையில் நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ள னர்.

இந்த நிலையில் எமக்கு 2இலட்சம் தருவதாக கூறி எம்மை ஏமாற்ற முனைகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தளபாடத் தொழிலில் திறமையாக ஈடுபடக் கூடியவர்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. உடனடியாக தொடர்புகொள்ளவும்.
0713 255 329

# ஐந்து வருடங்களுக்கு பின்னர் மீண்டும் சேவையில் இணைந்த நாலக சில்வா

## புத்தளம் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமனம்

புத்தளம் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நாலக சில்வாவை பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகள் மைத்ரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை கொலைசெய்ய சதி செய்ததாக, நாமல் குமார என்ற நபர் தெரிவித்த தகவலின் அடிப்படையில், பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவர் செப்டெம்பர் 19, 2018 அன்று கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டார்.

நாலக சில்வாவுக்கு எதிராக இதுவரை சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் எதனையும் நிரூபிக்க முடியாத பின்னணியில், அவரை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள கடந்த வாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, புத்தளம் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நாலக சில்வாவை நியமித்து பொலிஸ்மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் திகதி உதவி அத்தியட்சகராக பொலிஸ் சேவையில் இணைந்தார்.

இவருடன் உதவி அத்தியட்சகர்களாக இணைந்து பொலிஸ் சேவையில் இணைந்த பிரியந்த வீரசூரிய, சஞ்சீவ தர்மரத்ன, ரன்மல் கொடித்துவக்கு, ராஜித ஸ்ரீ தமிந்த மற்றும் சஜீவ மெதவத்த ஆகியோர் தற்போது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக உள்ளனர்.

# மாத்தறை மிதிகமவில் துப்பாக்கிச்சூடு;

## ஹோட்டல் உரிமையாளரொருவர் பலி

மாத்தறை – மிதிகம பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர் நேற்று (30) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (29) மாலை காரொன்றில் வந்த சிலர் குறித்த நபர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வீதியில் நின்றுகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

வெல்கமவிலுள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# ஊர்காவற்றுறையில் வெடிக்காத கண்ணிவெடி மீட்பு



ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, ஊர்காவற்துறை - பருத்தி அடைப்பு, ஜே/50 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட குளக்கரைக்கு அருகில் வெடிக்காத நிலையில் கண்ணிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த கண்ணி வெடியினை நீதிமன்றத்தின் அனுமதியின் பின்னர் மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாணய மாற்று வீதம் (30.03.2023)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 211.1422 | 225.0770 |
| கனேடியன் டொலர் | 232.7290 | 247.9306 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 45.3493 | 49.0664 |
| யூரோ | 343.9770 | 363.9907 |
| ஜப்பான் யென் | 2.3910 | 2.5325 |
| சிங்கப்பூர் டொலர் | 238.3972 | 252.5766 |
| ஸ்ரேலிங் பவுன் | 390.1318 | 412.6719 |
| சுவிஸ் பிராங் | 342.9502 | 366.3490 |
| ஐ.அ. டொலர் | 317.7257 | 335.4110 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 863.5174 |
| குவைட் | குவைட் தினார் | 1,062.1796 |
| ஓமான் | ஓமான் றியால் | 845.7545 |
| கட்டார் | கட்டார் றியால் | 89.0960 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.7208 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.6654 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்கிழமை 2023.03.29

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5074 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 26,375,703.00
ஆங்கில எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 7 1 4 9 2 8

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம்: 3316 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 91,906,111.44
ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 33 45 54 64

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1529 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,420,596.40
வெற்றி இலக்கினம்: துலாம் — வெற்றி இலக்கங்கள்: 6 3 1 7 6 5

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1104 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 83,746,530.80
ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 26 27 47 77

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம்: 383 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,654,182.80
வெற்றி இலக்கினம்: ரிஷபம் — வெற்றி இலக்கங்கள்: 07 31 52 61 — விசேட இலக்கினம்: ரிஷபம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம்: 1422 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 311,238,406.00
ஆங்கில எழுத்து: L — சுப்பர் இலக்கம்: 21 — வெற்றி இலக்கங்கள்: 21 25 27 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# நாவலர் மண்டபம் பறிக்கப்படவில்லை; யாருடையதோ அவர்களிடம் சென்றுள்ளது

## வடமாகாண ஆளுநர் விளக்கம்



(வட்டுக்கோட்டை நிருபர்)

யாழ். நல்லூர் நாவலர் மண்டபத்தை ஆளுநர் பறிக்கவோ தாரைவார்க்கவோ இல்லை. அது யாருடைய சொத்தோ அவர்களிடமே சென்றுள்ளது - வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (28) செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் அரசியல் கட்சி ஒன்றினால் ஏற்பாடுசெய்யப்பட்ட போராட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாவலர் மண்டபத்தை மத்திக்கு ஆளுநர் தாரைவார்த்துவிட்டார் மற்றும் மாநகர சபையிடமிருந்து பிடுங்கிக் கொடுத்துவிட்டார் என கோஷமிடுபவர்களுக்கு நாவலர் மண்டபம் இந்து கலாசாரத் திணைக்களத்துக்குச் சொந்தமானது என நன்கு தெரியும்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் 6/1/23 இலக்க 2207.1981ஆம் திகதிய கடிதம் - மேற்படி காணியை குறித்த அமைச்சு சார்பாக இந்து அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவித்து அதற்கான வரைபடங்களும் காணிப் பத்திரங்களும் அனுப்பப்பட்டன.

அது மட்டுமல்லாது 22.11.2021 திகதியிடப்பட்டு யாழ். மாநகர சபைக்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திணைக்களத்திற்கு உரித்தான யாழ். நாவலர் கலாசார மண்டபத்தை மீளக் கையளித்தல் தொடர்பாக HA/06/NKM/01 என்ற இலக்கமிடப்பட்ட அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதம் யாழ். மாநகர சபைக்கும் அனுப்பப்பட்டது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு உரித்தான யாழ். நாவலர் கலாசார மண்டபம் யாழ்ப்பாண மாநகர சபையின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டது. மீளக் கோரப்படும்போது இரண்டு மாத தவணையில் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையில் மாநகர சபைக்கு பணிப்பாளர், இந்து விவகாரம் அவர்களது 6/1/23 (ii). இலக்க 1985.0606 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி நாவலர் கலாசார மண்டபத்தினை மீள ஒப்படைக்குமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரது HA/06/NKM/01ஆம் இலக்க 2021.08.10ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

குறித்த கட்டிடம் அமைந்துள்ள காணி இந்து விவகாரத்திற்குப் பொறுப்பாகவிருந்த அப்போதைய பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் கையேற்கப்பட்டு அமைச்சின் நிதியில் கட்டப்பட்ட இம்மண்டபத்தின் உரிமை மற்றும் நிர்வகிக்கும் முழு அதிகாரம் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு உரித்தானது

இந்நிலையில், நாவலர் மண்டபத்தை ஆளுநர் மத்திக்கு தாரைவார்க்கவோ அல்லது மாநகர சபையிடமிருந்து பறித்துக் கொடுக்கவோ இல்லை.

யாழ். நாவலர் மண்டபத்தில் இடம்பெற்ற திருப்தியற்ற செயற்பாடுகள் காரணமாக மண்டபத்தைப் பாதுகாக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் என்னிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இவ்வாறான நிலையில், நாவலர் மண்டபம் கட்டப்பட்ட நோக்கத்தினை சிறந்த முறையில் கொண்டுசெல்வதற்கு தார்மீக உரிமை உடையவர்கள் அதனை பொறுப்பேற்றுள்ளார்கள் – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வடமராட்சியில் மீண்டும் கடற்படை பாஸ் நடைமுறை

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கடற்றொழிலாளர்கள் கடற்படையின் அனுமதி பெற்றே கடற்றொழிலுக்கு செல்ல வேண்டும் - என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

சுருக்கு வலை, மீன்பிடி உள்ளிட்ட சட்டவிரோத தொழில்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (29) புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அதன்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடலில் நடைபெறும் சட்டவிரோத மீன்பிடி முறைமைகள் உள்ளிட்டவற்றை ஏன் கடற்படையினர் கட்டுப்படுத்தவில்லை? நீரியல் வள திணைக்களமும் சட்டவிரோத கடற்றொழில் செய்வோருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கவில்லை என பல கடற்றொழிலாளர்கள் எம்மிடம் முறையிட்டுள்ளனர்.

கடற்படையினரின் அனுமதி பெற்று அவர்களின் கண்காணிப்புகள் மத்தியில் கடற்றொழிலுக்குச் செல்லும் நடைமுறை முன்னர் இருந்தது.

இது தொழிலாளர்களுக்குத் தொல்லையாகவும் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகவும் மக்கள் தெரிவித்ததையடுத்து அந்த நடைமுறைகளைத் தளர்த்தினோம்.

தற்போது கடற்படையினரின் கண்காணிப்புகள், அனுமதி பெறவேண்டிய தேவை இல்லை என்பதனால் பலர் சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுகின்றனர். அதனால் மீண்டும் கடற்படையின் அனுமதி பெற வேண்டும் என்பதனை கட்டாயமாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த நடைமுறையில் சாதக பாதகம் தொடர்பில் தொடர்ந்து ஆராய்ந்து அதனை தொடர்வதா அல்லது சட்டவிரோத தொழிலைக் கட்டுப்படுத்த மாற்று நடவடிக்கை உண்டா என்பது தொடர்பில் ஆராயும் வரையில் கடற்படையின் அனுமதி பெற்று தொழிலுக்கு செல்ல வேண்டும் – என்றார்.

# சைவ மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று

(யாழ். நிருபர்)

வடக்கு, கிழக்கிலுள்ள சைவ சமயம் சார்ந்த அமைப்புகள், கோவில் தர்மகர்த்தா சபையினர், ஆதீன கர்த்தாக்கள், கோவில் நிர்வாகத்தினைச் சேர்ந்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை (31) பிற்பகல் 4.00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட அமைப்புகளைச் சார்ந்த மூன்று பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சைவக் கோவில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் சைவமக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கவேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்ட அமைப்புகளைச் சார்ந்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# மண்டைதீவு சோதனைச்சாவடியைப் பலப்படுத்த நடவடிக்கை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மண்டைதீவிலுள்ள கடற்படை சோதனைச்சாவடியை பலப்படுத்தி தீவகத்திலிருந்து வெளியேறும் சகல வாகனங்களையும் சோதனைக்குட்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் (29) புதன்கிழமை மாலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கூட்டத்தில் தீவுப் பகுதியில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த மண்டைதீவிலுள்ள சோதனைச்சாவடியைப் பலப்படுத்தி தீவு பகுதியிலிருந்து வெளியேறும் வாகனங்களை சோதனை செய்வதன் மூலம் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த முடியும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஊர்காவற்றுறையில் 30 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(சாவகச்சேரி நிருபர்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை (27) ஊர்காவற்றுறை பிரதேசத்தில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட 30 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மேற்படி உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வானது திருவண்ணாமலை ரோட்டரிக் கழகத்தின் நிதிப் பங்களிப்புடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுன்னாகம் பாரம்பரிய மற்றும் இந்திய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் கலந்துகொண்டு உதவித் திட்டங்களை வழங்கினர்.





தலவாக்கலை கிறேட் வெஸ்டன் லூயிசா தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த திருவிழா உற்சவத்தை முன்னிட்டு முத்தேர் பவனி ஆலய பிரதம குருக்கள் மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

(படப்பிடிப்பு: பீ.கேதீஸ்)

# மஸ்கெலியா இந்துமாமன்றம் எதிர்ப்பு

(மஸ்கெலியா செய்தியாளர்)

வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை ஒருசில விஷமிகள் தகர்த்தெறிந்ததை வன்மையாகக் கண்டித்து மஸ்கெலியா இந்து மாமன்றம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது குறித்து மஸ்கெலியா இந்து மாமன்ற செயலாளர் கூறுகையில், மதவாதம் மீண்டும் வேண்டாம். உலகின் முழுமுதற் கடவுள் சிவனே. ஆகையால் எமது இலங்கைத் திருநாட்டில் வாழும் சகல மக்களும் இன, மத, மொழி பேதமின்றி ஒருதாய் மக்களாக வாழ வேண்டும்.

நாம் வணங்கும் சகல ஆலயங்களையும் நாமே பாதுகாக்க வேண்டும். இனவாதிகளாக செயற்படக் கூடாது.

வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மீண்டும் அதே இடத்தில் இருந்தவாறு அமைக்க சகல அரசியல்வாதிகள், சம்பந்தப்பட்ட அமைச்சு, கலாசாரத் திணைக்களம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பதுளை, நமுனுகுல பெருந்தோட்டக் கம்பனிக்கு உரித்துடைய இந்தகல தோட்டத்தில் 73 ஏக்கர் காணியினை தனிநபர் ஒருவர் சுவீகரிக்கின்றமையைக் கண்டித்து அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்று (30) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(நடராஜா மலர்வேந்தன்)

# இரத்தினபுரியில் இலவச அரிசி விநியோகத் திட்டம் ஆரம்பம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

அரசாங்கத்தின் வறுமை நிவாரணத் திட்டத்தின்கீழ் இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து ஒரு இலட்சத்து 92 ஆயிரத்து 444 குடும்பங்கள் தகுதிபெற்றுள்ளன. இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அகில எல்லாவலவின் ஏற்பாட்டில் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன தலைமையில் இரத்தினபுரி பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

இத்திட்டத்தினால் மேற்படி குடும்பங்கள் இரண்டு மாத காலங்களுக்கு தலா 10 கிலோ அரிசியை நிவாரணமாக பெற்றுக் கொள்வதாகவும் இதற்காக இப்பிரதேசத்தின் நெல் உற்பத்தி பயன்படுத்தப்படவுள்ளதாகவும் இங்கு உரையாற்றிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பல்கலை மாணவர்கள் நான்கு பேருக்கு பிணை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பகிடிவதை செய்தல், புதிய மாணவர்களை தாக்குதல் ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் நான்கு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 15ஆம் திகதி பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்பட்ட புதிய மாணவர்களின் விடுதிகளுக்குள் புகுந்து அவர்களுக்கு பகிடிவதைசெய்து தாக்கி காயம் ஏற்படுத்தியதாக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்களான இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்த மாணவர்கள் 23, 24, 25 வயதுகளையுடைய அம்பலாங்கொடை, தெஹிவளை, மொரட்டுவ, வெலிமடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.







பாடசாலைகளுக்கு தரம் - 1 மாணவர்களை உள்ளீர்க்கும் கால்கோள் நிகழ்வு வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட இராகலை கிருஸ்ணன் மாதிரி பாடசாலை அதிபர் இரா.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வலப்பனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.யோகராஜா, இராகலை உயர்நிலை தேசிய கல்லூரி அதிபர் மை.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஆ.ரமேஸ்)





பாணந்துறை ஜீலான் தேசிய பாடசாலையின் கருத்தரங்கு மண்டபத்திற்கு சுமார் 12 இலட்சம் ரூபா பெறுமதியான 100 விரிவுரை மண்டபக் கதிரைகள், ஜீலானில் 1999ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் மற்றும் 2002ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ, மாணவியர் குழாமினால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. மேற்படி கதிரைகள் கையளிக்கும் வைபவத்தின் போது குறித்த மாணவர்களுக்குத் தரம் 1முதல் தரம் 13 வரை கற்பித்த ஆசிரிய ஆசிரியர்களும் நினைவுச் சின்னங்களும் பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள் ஏ.எல்.எம்.சத்தார்)

# பிலிப் குணவர்தனவின் 51ஆவது நினைவுதின நிகழ்வு







தலைசிறந்த அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான பிலிப் குணவர்தனவின் 51ஆவது நினைவுதின நிகழ்வு நேற்று முன்தினம் (29) பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

பிலிப் குணவர்தன நினைவுதின நிகழ்வுக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, பிரதமர் தினேஷ் குணவர்தன வரவேற்று, விழா மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

நினைவுதின நிகழ்வில், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் வரலாற்றாசிரியர், கலைத்துறை விசாரத மற்றும் சர்வதேச திரைப்பட விருது பெற்றவருமான கலாநிதி சிங்கராஜ தம்மித்த தெல்கொட ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பிலிப் குணவர்தனவின் வாழ்க்கை பற்றிய குறுந்திரைப்படமும் திரையிடப்பட்டதுடன், பிலிப் குணவர்தனவிற்காக உருவாக்கப்பட்ட பாடலும் வெளியிடப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர், எல்கே குணவங்ச தேரர், பெல்லங்வில ரஜமஹா விகாராதிபதி கலாநிதி வண. பெல்லங்வில தம்மரத்ன தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களான நிமல் சிறிபால, பவித்ராதேவி வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர்களான ஜானக வக்கும்புர, கீதா குமாரசிங்க, டி.பி.ஹேரத், அனுப பஸ்குவல், பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, டிலான் பெரேரா, வஜிர அபேவர்தன, லக்ஷ்மன் கிரியெல்ல, துமிந்த திஸாநாயக்க, ரவூப் ஹக்கீம், எஸ்.எம்.சந்திரசேன, குமார வெல்கம, டலஸ் அலகப்பெரும, தயாசிறி ஜயசேகர, ரோஹித அபேகுணவர்தன, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ரஞ்சித் மத்துமபண்டார, கெவிந்து குமாரதுங்க, யதாமினி குணவர்தன மற்றும் அமைச்சர்கள், தூதுவர்கள், ஆளுநர்கள் உள்ளிட்ட அதிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.









கொழும்பிலுள்ள சவூதி அரேபியத் தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு காலிமுகத்திடல் ஹோட்டலில் நடைபெற்றது. சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதுவர் காலித் ஹமூத் அல்-கத்தாணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்முறையாக இலங்கையிலுள்ள ஈரானியத் தூதுவர் கலந்துகொண்டதுடன், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள், ராஜதந்திரிகள் எனப் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

(அஸ்ரப் ஏ. சமத், எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவ பெருவிழா நேற்று ஆரம்பமானது.

பங்குனி உத்திர பொங்கல் விழா விளக்கு வைப்புடன் நேற்று இனிதே ஆரம்பமானது. விசேட பூசை நிகழ்வுகள் நடைபெற்று பிரம்பு வழங்கும் வைபவமும் நடைபெற்றதுடன், அதனைத் தொடர்ந்து பாரம்பரிய முறையில் மாட்டுவண்டிகளில் பிரம்பு ஆலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்று (30) அதிகாலை 05.00 மணியளவில் மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவடியைச் சென்றடைந்து விசேட பூசைகளும் நடைபெற்றது. மீண்டும் 04/04/2023 அன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மடைப்பண்டம் புறப்பட்டு 05/04/2023 புதன்கிழமை மாலை 06.00 மணியளவில் ஆலயத்தை வந்தடையும்.

மங்களகரமான சுபகிருது வருடம் பங்குனி மாதம் 22ஆம் நாள் உத்தர நட்சத்திரம் (பி.ப.12.04வரை) கூடிய சுபவேளையில் 05/04/2023 புதன்கிழமை பகல், இரவு பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும் என கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# மறைந்த கலைஞர்கள் மூவரின் நினைவேந்தல் நிகழ்வு



பிரபல சிங்கள நட்சத்திர நடிகரும் அரசியல்வாதியுமான காமினி பொன்சேக்கா, திரைப்பட ஒளிப்பதிவாளர் லெனின் மொராயஸ் மற்றும் ஊடகவியலாளர் எம்.எஸ்.குவால்தீன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு மலையக கலை, கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் கண்டி கெப்பட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

மலையக கலை, கலாசார சங்கத்தின் தலைவர் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் பிரபல சிங்கள நட்சத்திர நடிகரும் அரசியல்வாதியுமான காமினி பொன்சேக்கா, திரைப்பட ஒளிப்பதிவாளர் லெனின் மொராயஸ் மற்றும் ஊடகவியலாளர் எம்.எஸ்.குவால்தீன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி துரைமனோகரன், வீரகேசரி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஸ்ரீபன், விசேட அதிதிகளாக பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர் பத்மசிறி கொடிக்கார, திரைப்பட தொலைக்காட்சி நடிகர் விஸ்வ கொடிக்கார, சிங்கள, தமிழ் திரைப்பட நடிகர் ரிச்சர்ட் வீரக்கொடி, சட்டத்தரணி ஏ.எம்.வைஸ், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் இரா.அ.இராமன், சமூகப் பணியாளர் ஐ.ஜனுடன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், ஓய்வுபெற்ற கடற்படை வீரர்கள், வீராங்கனைகள் உள்ளிட்டவர்கள் பாராட்டிக் கௌவிக்கப்பட்டனர். இதில் விசேடமாக வீரகேசரி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஸ்ரீபன், சமூகப்பணியாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன், எம்.எஸ்.குவால்தீன் மகன் ஊடகவியலாளர் கே.எம்.ரசூல் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் எஸ்.ஏ.ஏ.ஹனிபா, குண்டசாலை தமிழ் விவேகானந்தா தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.சிவஞானசுந்தரம், கலாபூஷணம் எஸ்.இஸ்மாலிகா, சந்தரவதனா ரட்ணராஜா, சில்மியா, ஓய்வுபெற்ற கடற்படையினர் எனப் பல்வேறு தரப்பினர் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள் - இக்பால் அலி)

## சமூக நல்லிணக்கத்துக்கான இப்தார் நிகழ்வு திருமலையில்




(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் மெலிபன் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு சர்வமதத் தலைவர்கள் தலைமையில் புதன்கிழமை (29) திருகோணமலையில் இடம்பெற்றது.

கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் மெலிபன் பால்மா நிறுவனத்தினால் நடத்தப்படும் இப்தார் நிகழ்வு இவ்வருடம் திருகோணமலையில் மூன்று வெவ்வேறு இடங்களில் மும்மதத்தினரின் பங்களிப்புடன் 400இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

குறித்த மெலிபன் நிறுவனமானது நாட்டில் சமூக ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் பல வேலைத்திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்ற நிலையில், அதன் ஓர் அங்கமாக இந்த இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், குறித்த இப்தார் நிகழ்வில் மெலிபன் பால்மா நிறுவனத்தின் வடக்கு, கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் ஜே.பிரதீபன், கிழக்கு மாகாண உத்தியோகபூர்வ மேற்பார்வையாளர் நல்லதம்பி சுதர்சன் மற்றும் திருகோணமலை மாவட்ட உத்தியோகபூர்வ விற்பனை முகவர் பாவாடின் அப்துல் நஜிப், நிறுவனத்தின் பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் திருகோணமலை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## அரசாங்கத்துக்கும் சிங்களவர்களுக்கும் முஸ்லிம் மக்கள் உதவி செய்திருக்கிறார்கள்

### அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க

(பெரியநீலாவணை செய்தியாளர்)

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள், சிங்கள மக்களுக்கும் நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் உதவி செய்து வந்திருக்கிறார்கள் - என அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

மருதமுனை மனாரியன்ஸ் 95 பழைய மாணவர்களின் பிரண்ஸ் வெல்பயா அமைப்பு ஏற்பாடுசெய்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு மருதமுனை அல்-மனார் மகளிர் கல்லூரியில் திங்கட்கிழமை (27) நடைபெற்றது.



இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டம் மூவின மக்களும் வாழுகின்ற பிரதேசமாகும். தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என சகல இன மக்களும் இங்கு ஒற்றுமையோடு வாழ்கிறார்கள். ஒருவரது ஜீவனோபாய தொழில் இன்னொரு சமூகத்தவர் வாழ்கின்ற பிரதேசத்தில் தங்கியிருக்கின்றது. ஒருவருடன் ஒருவர் சகோதரத்துவ மனப்பான்மையுடன் வாழ்கின்ற சூழலை காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையை பொறுத்தளவில் பொருளாதாரத்தில் முஸ்லிம்கள் முன்னணியில் திகழ்கின்றார்கள். அதேபோன்று கல்வி வளர்ச்சியிலும் முஸ்லிம் தலைவர்கள் பாரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். ரி.பி.ஜாயா, பதியுதீன் மஹ்மூத், எஸ்.எஸ்.ஹமீத் போன்றவர்கள் இனம், மதம், மொழி பாராமல் நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

சிங்கள பௌத்த மக்கள் முஸ்லிம் மக்களை 'மரக்கல' என்று அழைப்பார்கள். மரக்கல என்பதன் அர்த்தம் 'மா ரேக லே' (எங்களை பாதுகாத்த இரத்தம்) என்பதாகும். இலங்கை வரலாற்றில் அதன் ஆட்சியாளர்களுக்கு முஸ்லிம் தலைவர்கள் பக்கபலமாக இருந்து பாதுகாப்பு வழங்கியிருக்கிறார்கள். நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைகின்ற சந்தர்ப்பங்களில் தமது பொருளாதாரத்தை சமூகப் பணிக்காக, நாட்டின் வளர்ச்சிக்காக வழங்கி தியாகங்களை செய்திருக்கிறார்கள். இதனை மறந்து விட முடியாது. மூவின மக்களும் கலந்துகொள்கின்ற சமய நிகழ்வுகள் வரவேற்கத்தக்கதாகும். முஸ்லிம்களை பொறுத்தளவில் ரமழான் நோன்பு மிக முக்கியமான ஒரு சமய கடமையாகும். இந்தக் காலப்பகுதியில் அதிகம் நன்மைகள் செய்யவேண்டும்.

இந்நிகழ்வில் விசேட மார்க்க சொற்பொழிவை விரிவுரையாளர் எப்.எம்.அஹமது அன்சார் மௌலானா (நழிமி) நிகழ்த்தினார். இதன்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்ஸின் பக்கீர், பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஜெ.துஸார ஜெயலால், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி டி.எஸ்.ரத்நாயக்க, அல்-மனார் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப் உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள் அமைப்பின் குடும்ப உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## தரம் ஒன்று மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தலுக்கான தேசிய கால்கோள் விழா




(வெல்லாவெளி செய்தியாளர்)

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் தரம் ஒன்று மாணவர்களுக்கான செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் (ABOE) கற்பித்தலுக்கான தேசிய நிகழ்ச்சித்திட்ட கால்கோள் விழா மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமாரின் வழிகாட்டல் ஆலோசனையின் பிரகாரம், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தேவரஜனி உதயாகரன் தலைமையில் வியாழக்கிழமை (30) காலை மாணவர்களுக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான க.ஹரிகரராஜ், திருமதி கரன்யா சுபாகரன், ஆரம்பக்கல்விப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாவதி விவேகானந்தம், சேவைக்கால ஆங்கிலப்பாட ஆலோசகர் திருமதி வி.மகேஸ்வரன், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை பாஸ்கர், ஆரம்பப் பிரிவுத் தலைவர் எஸ்.சிற்சபேசன், வலயக்கல்வி அலுவலக துறைசார் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கு செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி கற்பித்தல் நிகழ்வுகள் ஆடல்பாடலுடன் செயற்பாட்டுத் திறனுடன் பொறுப்பான ஆசிரியையினால் மகிழ்ச்சிகரமான முறையில் கற்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக கலாசார பீட ஊடக நுழைவு மையம் அங்குரார்ப்பணம்






(மாளிகைக்காடு செய்தியாளர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் ஊடக அணுகல் மையத்தை ஸ்தாபிப்பதற்கான நிகழ்வு வியாழக்கிழமை (30) கலை, கலாசார பீடத்தின் மாணவர் செயற்பாட்டு நிலையத்தில் இடம்பெற்றது.

கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

மேலும் இன்ஸ்பெயார் செயற்றிட்டத்தின் முகாமையாளர் திருமதி சந்துல கும்புக்ககே தலைமையிலான குழுவினர், பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர், பதில் நிதியாளர், சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், கலை, கலாசார பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விசார் ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் வரவேற்புரை பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தனது வரவேற்புரையில், ஹெல்விடாஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற மாணவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தமது பீட மாணவர்களின் அறிவு மற்றும் திறன் விருத்தியில் கணிசமானளவு பங்களிப்பு செய்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்ததுடன், பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரி மற்றும் இதழியல் டிப்ளோமா மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஊடகம் மற்றும் இதழியல் தொடர்பான கற்கைகளை உள்ளடக்குவதற்கு பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளமை தொடர்பிலும் குறிப்பிட்டிருந்தார்.

குறிப்பாக, பீடத்தின் மொழித்துறை, அரசியல் விஞ்ஞானத்துறை மற்றும் சமூகவியல் துறையின் பாடத்திட்டங்கள் இதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளமை குறித்து உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து இன்ஸ்பெயார் செயற்றிட்டத்தின் முகாமையாளர் திருமதி சந்துல கும்புக்ககே, ஹெல்விடாஸ் நிறுவனம் மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கான காரணங்கள் குறித்தும் எமது பீட மாணவர்களின் வினைத்திறனான பங்குபற்றல் குறித்தும் உரையாற்றினார்.

தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் உரையாற்றுகையில், மாணவர்களின் திறன் விருத்தியில் குறித்த நிறுவனத்தின் பங்களிப்புகளை பாராட்டியதுடன், பல்கலைக்கழக சமூகம் குறித்த செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ந்தும் ஹெல்விடாஸ் நிறுவனத்துடன் இணைந்து செயலாற்ற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் நன்றியுரையினை கலை, கலாசார பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.டி.அஸ்ஹர் வழங்கினார். இந்நிகழ்வில் இன்ஸ்பெயார் செயற்றிட்டத்தின் கீழ் ஹெல்விடாஸ் நிறுவனத்தினால் 1.5 மில்லியன் பெறுமதியான ஊடக உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டதுடன், அதற்கான உடன்படிக்கையொன்றும் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் திருமதி சந்துல கும்புக்ககே ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

## சட்டத்தரணிகளுக்கான நூலகம் திறந்துவைப்பு




(மருதமுனை செய்தியாளர்)

கல்முனை நீதிமன்ற கட்டடத்தொகுதியில் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற கட்டடத்தில் புதிய சட்ட நூலகம் சட்டத்தரணிகளின் பாவனைக்காக கல்முனை சட்டத்தரணிகளின் சங்கத் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் புதன்கிழமை(29) திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதம அதிதியாக கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி, கௌரவ அதிதிகளாக கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.முஹம்மட் றியாஸ், கல்முனை நீதிமன்ற நீதிவான எம்.எஸ்.எம்.சம்சுதீன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி 40 வருட காலத்தின் பின்னர் புதிய நூலகம் அமைக்கப்பட்ட வரலாறு மற்றும் அதற்கான உதவிகள் குறித்து தலைமையுரையாற்றினார்.

சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலரது பங்களிப்பில் கிடைக்கப்பெற்ற பெறுமதியான சட்டப்புத்தகங்கள் உத்தியோகபூர்வமாக புதிய சட்ட நூலகத்துக்கு வழங்கப்பட்டு நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.



திருகோணமலை மாவட்ட கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரசால் இலவச அரிசி வழங்கும் திட்டம் புதன்கிழமை (29) திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது. பாத்தியகம, ரஜ எல, அக்போபுர ஆகிய பிரதேசங்களிலுள்ள 88 ஆயிரத்து 870 குடும்பங்கள் இவ்வுதவியை பெற தகுதிபெற்றுள்ளன. இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, கந்தளாய் பிரதேச செயலாளர் என்.எம்.உபேக்சா குமாரி, அதிகாரிகள் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

(கிண்ணியா செய்தியாளர்)



அட்டாளைச்சேனை அந்நமல் அமைப்பினால் சம்புநகர், அட்டாளைச்சேனை, பாலமுனை போன்ற கிராமங்களிலிருந்து 20இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நோன்பு பெருநாளை முன்னிட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுதுணிப் பொதிகள் அட்டாளைச்சேனை உதவி செயலாளர் திருமதி நஹீஜா முஸாபீர் தலைமையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அமைப்பின் தலைவர் கே.எல்.எம்.முனாஸ் மற்றும் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் முகமட் அர்ஸாத் மற்றும் கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜௌபர் மற்றும் சம்புநகர் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் யு.கே.ஜுனைதீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)





கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த விசேட இப்தார் நிகழ்வு சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் மருதமுனை மூன் விலேஜ் ஹோட்டலில் புதன்கிழமை (29) மாலை நடைபெற்றது. இதில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராம் ட்ரொக்ஸி, கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன், கல்முனை காதி நீதவான் சிரேஷ்ட சட்டத்தரணி எப்.எம்.அமீருல் அன்சார் மௌலானா உட்பட கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆண் மற்றும் பெண் சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர். (பெரியநீலாவணை செய்தியாளர், பாறுக் ஷிஹான்)

கடந்த 2021ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் காட்டு யானைகளின் தாக்கத்தினால் சொத்தழிவுக்குள்ளான காரைதீவு 07 மற்றும் 12, மாவடிப்பள்ளி கிழக்கு மற்றும் மாளிகைக்காடு மேற்கு ஆகிய பிரிவுகளிலுள்ள 05 பயனாளிகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுத் தொகைக்கான காசோலைகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் இக்காசோலைகளை வழங்கினார். உதவி பிரதேசசெயலாளர் எஸ்.பார்த்தீபன் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் ஆகியோரும் உடனிருந்தனர். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)



# அக்கரைப்பற்றில் இலவச உரம் வழங்கிவைப்பு



(அட்டாளைச்சேனை செய்தியாளர்)

அமெரிக்க யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் மூலம் இலங்கைக்கு நன்கொடை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அடிக்கட்டு உரத்தினை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் வேலைத்திட்டம் அக்கரைப்பற்றில் வியாழக்கிழமை (30) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

விவசாய அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்டுவரும் இவ்வேலைத்திட்டத்திற்கு அமைவாக, அக்கரைப்பற்று மேற்கு கமநல சேவைகள் நிலையத்தின் கீழுள்ள விவசாயிகளுக்கு இவ்விலவச உரம் வழங்கப்படவுள்ளது. இம்முறை சிறுபோகச் நெற்செய்கையில் ஈடுபடவுள்ள சுமார் 3 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு இவ்விலவச உரம் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.அப்துல் ஹமீட் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்விலவச அடிக்கட்டு உரம் பிராந்தியத்திலுள்ள சுமார் 11ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்துவதற்காக விநியோகிக்கப்படவுள்ளது.

ஏக்கர் ஒன்றுக்கு 22 கிலோகிராம் என்னும் அடிப்படையில் ஆகக்கூடியளவு ஐந்து ஏக்கர் விவசாய நிலப்பரப்பில் விவசாயச் செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இவ்விலவச அடிக்கட்டு உரம் விநியோகிக்கப்படுகின்றது. இலவச உரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளின் போது சுமார் 500 விவசாயிகளுக்கு இலவச உரம் விநியோகிக்கப்பட்டதாகவும், தெரிவு செய்யப்பட்ட விவசாயக் குழுக்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுவரும் இலவச உரத்தினை விவசாயிகள் பெற்றுக்கொள்ளுமாறும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.அப்துல் ஹமீட் இதன்போது தெரிவித்தார்.

# காட்டு யானைகளின் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கான கலந்துரையாடல்





(திகாமடுல்ல செய்தியாளர்)

பொத்துவில் ஹிஜ்ரா நகர் பிரதேசத்தின் சிரியா, ஜெய்க்கா, ரொட்டை ஆகிய கிராமங்களில் யானை - மனித மோதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஜெய்க்கா பல்தேவைக் கட்டிடத்தில் புதன்கிழமை (29) இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும் பொத்துவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலின்போது பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், வனஜீவராசிகள் பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர் மற்றும் மூன்று கிராமங்களையும் சேர்ந்த பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அண்மைக்காலமாக இப்பிரதேசங்களில் அதிகரித்துள்ள காட்டு யானைகளின் தாக்குதல்களினால் மக்கள் உயிர் அச்சுறுத்தலுடன் தமது இரவுநேர வேளைகளை தூக்கமின்றி பீதியுடன் கழித்து வருவதுடன், மக்களின் சொத்துகள், விவசாய உற்பத்திப் பயிர்களுக்கும் பெரும் நாசமும் ஏற்பட்டு வருவதாக இக்கிராம மக்கள் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

இங்கு மக்களின் கருத்துகளை உன்னிப்பாகக் கேட்டறிந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர், கடந்த சில தினங்களாக இக்கிராமங்களில் யானையின் அட்டகாசம் அதிகரித்திருப்பதனால் இவற்றைத் தடுப்பதற்காக வனஜீவராசிகள் அதிகாரிகள் உரிய இடங்களுக்கு விரைவாக வருகை தந்து யானைகளை விரட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அத்தோடு அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு இப்பகுதி மக்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் - என்றார்.

கடந்த காலங்களை விட யானை வெடி குறைந்தளவான தொகையே இப்போது பிரதேச செயலகங்களுக்குக் கிடைக்கின்றது. பொத்துவில் பிரதேசத்திற்கு கூடுதலான யானை வெடிகளை வழங்குமாறு உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளேன். அதேபோன்று இப்பகுதி மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாப்பதற்காக யானை வேலிகளை அமைப்பதற்காக அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் முஷாரப் எம்.பி. தெரிவித்தார்.

# 3 உணவகங்கள் மீது அபராதம் விதிப்பு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் தேசிய ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் தேசிய உணவுப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு உணவு விற்பனை செய்யும் நிலையங்களில் திடீர் பரிசோதனை இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்ஷத் காரியப்பர் தலைமையில் சாய்ந்தமருது பிரதேசத்தில் திடீர் பரிசோதனை இடம்பெற்று மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து மூன்று உணவகங்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பழுதடைந்த சம்சா வைத்திருந்தமை, ஹோட்டல் கழிவுநீரை முறையாக அகற்றாமை, குளிர்சாதனப் பெட்டியை முறையாக பராமரிக்காமை போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட உணவகங்கள் மீது 15 ஆயிரம், 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் தண்டப்பணம் செலுத்த கல்முனை நீதவான் நீதிமன்றம் புதன்கிழமை (29) உத்தரவு பிறப்பித்துள்ளது.

# நிந்தவூரில் இராணுவ முகாமை அகற்ற நடவடிக்கை முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேச சபை அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குள் முதலிடம் பெற்றமையினால் பரிசுத் தொகையாக கிடைக்கப்பெற்ற 1,00,000 அமெரிக்க டொலர் நிதியினைக் கொண்டு நிந்தவூர் பிரதேச சபைக்கு சொந்தமான பிரதேச சபையின் பழைய கட்டிடம் அமைந்துள்ள இடத்தில் பண்ணை தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கான வர்த்தக கட்டிட தொகுதியினை அமைப்பதற்கான முன்னெடுப்புகள் இடம்பெற்றன.

அதனடிப்படையில் பிரதேச சபையின் பழைய கட்டிடத்தில் அமைந்திருக்கின்ற இராணுவ முகாமினை அகற்றுவதற்கான முன்னெடுப்புகளின் ஓர் அங்கமாக புதன்கிழமை (29) அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் அழைத்துவந்து பார்வையிட்டிருந்தனர்.

இதன்போது இராணுவ உயரதிகாரி, அம்பாறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எல்.அப்துல் லதீப், நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிர், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களென பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வாள்வெட்டுத் தாக்குதலில் மூவர் வைத்தியசாலையில்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலையில் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான மூவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோலையடி பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற வாக்குவாதம் கைகலப்பாக மாறியதிலேயே இவ்வாள்வெட்டு சம்பவம் புதன்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மூன்றாம் கட்டைப் பகுதியிலுள்ள பிரபல ஹோட்டலொன்றின் உரிமையாளரான திருகோணமலை - செல்வநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த ஆர். முரளிதரன் (46 வயது), ஆர்.விஜேந்திரன் (49 வயது) மற்றும் உப்புவெளி -சோலையடி பகுதியைச் சேர்ந்த பாக்கியராசா செல்வா (51 வயது) ஆகியோர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

காயமடைந்த மூவரும் திருகோணமலை பொது வைத்தியசாலை விபத்து சேவை பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்ற நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட குறித்த மூவரையும் உப்புவெளி பொலிஸார் வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# வருமான சட்டமூலம் இல்லாமல் இயங்கும் கிழக்கு மாகாண சபை

## சமூக அபிவிருத்திக் கட்சி குற்றச்சாட்டு

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண சபை வருமான சட்டமூலம் இல்லாமல் சபைகளுக்கிடையே ஒருமைப்பாடு இல்லாமல் வருமான நிதி சேகரிக்கப்பட்டு வருவதாக சமூக அபிவிருத்தி கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் குகதாஸ் பிரகாஷ் கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு இது தொடர்பாக கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகள் வருமானம் சேகரிக்கும் பொருட்டு பணத்தைப் பெறுகின்றார்களே தவிர, உப சட்டமூலம் இல்லாமல் சேகரிக்கும் வருமானங்களுக்கு சேவை கிடைக்கப்பெறவில்லை எனவும் குற்றம் சாட்டுகின்றார்.

மேலும் நடைபாதை வியாபாரி, சுற்றுலா விடுதி, ஹோட்டல், உணவு விடுதி, கல்யாண மண்டபங்கள், பல்வேறுபட்ட வர்த்தகக் கடைகள், அறுவை சாலை கட்டணம், வீதி அலங்காரம் செய்தல், வெதுப்பகக் கட்டணம் போன்ற விடயங்களுக்காக நகர சபை, மாநகர சபைகள் வருமானம் சேகரிப்பு நடைபெற்று வருகிறது.

ஆனாலும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை. பணம் அறவிடுவதை தவிர, சுகாதாரமற்ற அமைவிடம் சுற்றாடல் பாதிப்பு ஆகியவை கருத்திற்கொள்ளப்படுவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை 1988ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபை 2007ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டு இன்றுவரை உள்ளூராட்சி சபைகளில் உப சட்டமூலம் வெளியிடப்படவில்லை எனவும் வடக்கு மாகாண சபை 2017ஆம் ஆண்டு உப சட்டமூலம் வெளியிட்டுள்ளது எனவும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, கிழக்கு மாகாண சபை உப சட்டமூலத்தை உடனடியாக வெளியிட வேண்டும் எனவும் அவர் பிரதம செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிதி உதவி வழங்கும் திட்டம்



(மட்டக்களப்பு)

பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட, சிரேஷ்ட பிரஜைகளுக்கான உபகாரக் கொடுப்பனவிற்கு விண்ணப்பித்து காத்திருப்பு பட்டியலிலுள்ள சிரேஷ்ட பிரஜைகளுக்கு விசேட தேவையுடையவர்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் தகவல்களுக்கான நிலையம், அகில இலங்கை கிறிஸ்தவ வாலிபர் சங்கம் மற்றும் உளவளத்துணை ஆலோசனை நிலையம் ஆகியன இணைந்து கிறிஸ்தவ கண்பார்வையற்றோர் அமைப்பின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முதியோருக்கு விசேட நிதியுதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் (22) இடம்பெற்றது.

இதன்மூலம் 281 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட நிலையில், முதல் கட்டமாக 15 சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூபா 5 ஆயிரம் பெறுமதியான காசுக் கட்டளை பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் வழங்கப்பட்டது.

இதில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஆர்.ஷியாஹுல் ஹக், விசேட தேவையுடையவர்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் தகவல்களுக்கான நிலைய நிறுவனப் பணிப்பாளர் காண்டீபன், சமூக சேவை உத்தியோகத்தர் ப.ராஜ்மோகன், கிராம நிர்வாக உத்தியோகத்தர் கே.ராஜன், மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ப.விஸ்வகோகிலன் மற்றும் பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கிழக்கில் வாழும் சமூகங்களிடையேயான சகவாழ்வை சீர்குலைக்கும் முடிவுகளை அமுல்படுத்த வேண்டாம்

## கிழக்கு ஆளுநரிடம் சர்வமதப் பேரவை வேண்டுகோள்

(மட்டக்களப்பு செய்தியாளர்)

சமூக நல்லுறவு, சகவாழ்வு ஆகியவற்றோடு வாழும் சமூகங்களிடையே சமாதானத்தைச் சீர்குலைக்கும் முடிவுகளை எடுத்து அமுல்படுத்த வேண்டாம் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர்.மனோகரன் தெரிவித்தார்.

மாவட்ட சர்வமதப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடல் மட்டக்களப்பு கூட்டுறவு கேட்போர் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது. இதன்போது மாவட்டத்தில் இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் அதிகாரபூர்வ விடயங்கள் பற்றிய கரிசனைகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்களும் அதன் சமாதான செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு மீன் பாடும் தேன் நாடு எனும் பூர்வீகத் தமிழ்ப் பெயரை 'மீனகய' என்று மாற்றியிருப்பது, அதேபோன்று மட்டக்களப்பு கொழும்புக்கு இடையிலான 'உதய தேவி' புகையிரத சேவைக்கு சிங்களப் பெயரைச் சூட்டியிருப்பது, மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திற்கு அருகிலுள்ள பூங்காவிற்கு சிங்களப் பெயரைச் சூட்டியிருப்பது, மேலும், இவ்வாரம் தொன்மை வாய்ந்த பெயரைக்கொண்ட ஏறாவூர் புன்னைக்குடா வீதியை சிங்கள சமூகத்தவரின் 'எல்விஸ் வல்கம' வீதி எனப் பெயர் மாற்ற நடவடிக்கை எடுத்திருப்பது உள்ளிட்ட இன்னும் பல விடயங்களை சமூக நல ஆர்வலர்கள் முன்வைத்தனர்.

இதன்போது இவ்வாறான பூர்வீகங்களையும் சிறுபான்மை இனங்களின் அடையாளங்களையும் மாற்ற எடுக்கும் அதிகாரபூர்வ நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டாம் என ஆளுநரைக் கோருவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வேண்டுகோள் கடிதங்கள் ஆளுநர், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் உட்பட சமாதான செயற்பாட்டு அமைப்புகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் இணைப்பாளர் மனோகரன் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# போடியார் புலம்பல்!



வடக்கு கிழக்கில பௌத்த மயமாக்கல செய்யிற நோக்கம் தமது அரசாங்கத்துக்கு இல்லையாம் எண்டு வாய்கூசாம பொய்சொல்லுறான், இந்த வெறுவாக்கிலம் கெட்ட பிரதமர் தினேஷ் குணவர்தன எண்ட பொய்யன். அடே மறுகா வெடுக்குநாறி மலயில ஆதிசிவன் ஆலயத்த இடித்து புத்தர் சில வைக்கிறதும், மட்டக்களப்புல மேச்சல்தரய அபகரித்து சிங்களவர குடியேற்றி பன்சல கட்டிறதும், கன்னியா வென்னீர் ஊற்ற மொத்தமா தொல்பொருள் ஆக்கள் எடுத்ததும் எந்த அரசாங்கம்டா? முழுப்பூசணிக்காய சோத்தில புதைக்கத்தானே உன்ன குள்ளநரி பிரதமராக வைச்சிருக்கான் எலுவா?

# சூரிய மின்சக்தி நிலையம் அமைக்கப்படவுள்ள காணி தொடர்பில் ஆராய கலந்துரையாடல்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் 350 ஏக்கர் நிலப்பரப்பில் மகாவலித் திட்டத்தின் ஊடாக இடம்பெறவுள்ள சூரிய மின்சக்தி நிலையம் அமைக்கப்படவுள்ள காணி தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை(27) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஆ.தேவராஜ், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர் த.தஜீவரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், விவசாய மற்றும் கமநல சேவை திணைக்கள அதிகாரிகள், வனவளத் திணைக்கள அதிகாரிகள், சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் மற்றும் கிரான் பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர் உள்ளிட்ட துறைசார்ந்த உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் நிகழ்நிலை ஊடாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டு குறித்த விடயம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடினர். குறித்த திட்டம் மாவட்டத்தின் அபிவிருத்தியில் பங்காற்றுகின்ற போதிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள காணியில் விவசாயம் மேற்கொள்ளும் வயல் காணிகளும் உள்ளடங்குவதாக இராஜாங்க அமைச்சரிடம் விவசாயிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே குறித்த விடயம் தொடர்பாக கலந்தாலோசிக்கும் கூட்டம் இடம்பெற்றதுடன், ஒரு வார காலத்திற்குள் துறைசார் அதிகாரிகளுடன் களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டு குறித்த திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பான திட்டத்தினை முன்னெடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் இதன்போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

# படகுச் சேவையை இரு வாரங்களுக்குள் ஆரம்பிக்க அமைச்சர் சந்திரகாந்தன் பணிப்பு

(புளியந்தீவு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசமான திகிலிவெட்டை ஸ்ரீசந்திவெளி படகுச் சேவையை உடனடியாக ஆரம்பிக்குமாறும் இதனோடு தொடர்புபட்ட பஸ் சேவையை சீராக்குமாறும் இராஜாங்க அமைச்சர் எஸ்.சந்திரகாந்தன் வாழைச்சேனை போக்குவரத்துச் சபைக்கும் பிரதேச சபைக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக மாவட்ட பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் போக்குவரத்து சபை டிப்போக்களின் பிரதானிகளுக்கு இடையிலான ஒன்றிணைந்த கலந்துரையாடல் புதன்கிழமை(29) மாவட்ட செயலகத்தில், மாவட்ட அபிவிருத்திக் குழு காரியாலயத்தில் இடம்பெற்றது.


இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பிரகாஷும் கலந்துகொண்டார். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச சபைகளின் செயலாளர்களும் போக்குவரத்துச் சபையின் டிப்போ பிரதானிகளும் இதில் கலந்து கொண்டு தாங்கள் எடுத்துவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்துரைத்தனர்.

இதன்போது மேற்குறித்த படகுச் சேவையின் தற்போதைய சீரற்ற நிலையும் ஒழுங்கற்ற சேவையும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் பின்தங்கிய பிரதேச மக்களும் பாடசாலை மாணவர்களும் தங்களது பயணத்தின்போது மிகவும் சிரமப்படுவதாக தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனை செவிமடுத்த இராஜாங்க அமைச்சர் இன்னும் இரு வாரங்களுக்குள் போக்குவரத்து சேவையும் படகுச் சேவையும் சீர்படுத்தப்பட வேண்டும் என்றும் போக்குவரத்து சேவையை வாழைச்சேனை பஸ் டிப்போ பிரதானியும் படகுச் சேவையினை வாழைச்சேனை பிரதேச சபையும் இரு வாரங்களுக்குள் நிறைவுசெய்ய வேண்டுமென பணிக்கப்பட்டது.

# சூரியனில் பூமியை விட 20 மடங்கு பெரிய துளை

## மணிக்கு 2.9 இலட்சம் கி.மீ. வேகத்தில் பூமியை நோக்கி வரும் சூரியப்புயல்




சூரியனில், பூமியை விட 20 மடங்கு பெரியளவிலான துளையொன்றை நாசா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

சூரியனின் அமைப்பு, செயற்பாடு உள்ளிட்டவை குறித்து நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகம் ஆய்வு செய்து வருகிறது. இதில், அதிர்ச்சி தரும் விசயம் சமீபத்தில் தெரிய வந்துள்ளது. சூரியனில் பூமியை விட 20 மடங்கு பெரியளவிலான கருமையான பகுதி தென்படுகிறது. இது 'கொரோனா துளை' என விஞ்ஞானிகளால் அழைக்கப்படுகிறது. பார்ப்பதற்கு சூரியனின் ஒரு பகுதி காணாமல் போனது போன்றுள்ளது.

இந்த 'கொரோனா துளை'யை சூரியனின் தென்துருவ பகுதியருகே கடந்த 23ஆம் திகதி நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகம் கண்டறிந்தது. இதனால், புவிகாந்த புயல்கள் அல்லது சூரியப்புயல் ஏற்படக்கூடும் என்று அமெரிக்காவின் என்.ஓ.ஏ.ஏ. அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இப் பெரிய துளையிலிருந்து வீசும் சூரியப்புயல், மணிக்கு 2.9 இலட்சம் கி.மீ. வேகத்தில் பூமியை நோக்கி வரும் என்றும் அது இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெறும் என்றும் news.com.au என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனை ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

தொடர்ச்சியாக சூரியனிலிருந்து வரும் ஆற்றல் நிறைந்த துகள்களால், பூமியின் காந்தப்புலம், செயற்கை கோள்கள், மொபைல் போன்கள் மற்றும் ஜி.பி.எஸ். போன்றவற்றுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த சூரிய காற்று அல்லது புவிகாந்த புயல்கள், விண்வெளியில் உடனடியாக பரவுவதற்கு கொரோனா துளை அனுமதிக்கிறது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த கொரோனா துளை அளவில் 3 இலட்சம் கி.மீ. முதல் 4 இலட்சம் கி.மீ. வரை பரந்து விரிந்துள்ளது. இதன்படி, 20 முதல் 30 பூமிகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக வைக்கப்பட்டால் எவ்வளவு பெரியதோ அந்த அளவுக்கு உள்ளது என்று நாசாவின் அறிவியல் பிரிவை சேர்ந்த அலெக்ஸ் யங் என்பவர் தெரிவித்துள்ளார். வெள்ளிக்கிழமை என பொதுவாக கூறியபோதும், ஆய்வாளர்கள் கூறிய விடயம் அறிவியல் உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.




உலக செய்திகள்

# தீப்பிடித்து எரிந்த பிலிப்பைன்ஸ் பயணிகள் படகு: 31 பேர் பலி: 23 பேர் படுகாயம்; 7 பேர் மாயம்









பிலிப்பைன்ஸின் தெற்கு கடற்கரைப் பகுதியில் பயணிகள் படகில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று குழந்தைகள் உட்பட 31 பேர் உயிரிழந்துள்ளதுடன் 230 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மிண்டனாவ் தீவிலுள்ள ஜோம்போங்கா நகரத்திலிருந்து பயணிகள் மற்றும் கப்பல் பணியாளர்கள் உட்பட 250 பேருடன் நேற்றுமுன்தினம் (29) ஜோலோ தீவுக்கு சென்று கொண்டிருந்த எம்வி லேடி மேரி ஜோய் (MV Lady Mary Joy 3) என்ற படகு, பலுக்-பாலுக் தீவுக்கு அருகில் சென்றபோது திடீரென தீ விபத்து நிகழ்ந்தது.

தகவலறிந்த கடலோரக்காவல்படை மற்றும் மீனவர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டு, பணியாளர்கள் மற்றும் பயணிகளை மீட்டுள்ளனர்.

விபத்தில் 23 பேர் காயமடைந்துள்ளதுடன் 7 பேரின் விபரங்கள் தெரியவில்லையெனவும், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போப் பிரான்சிஸுக்கு சுவாசத் தொற்றுநோய்

## வைத்தியசாலையில் அனுமதி



போப் பிரான்சிஸ் (வயது 86) சுவாசத் தொற்றுநோய் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


போப் பிரான்சிஸுக்கு கடந்த சில நாட்களாக சுவாசிப்பதில் சிரமம் இருந்ததாகவும், ஆனால் கொரோனா அறிகுறி எதுவும் தென்படவில்லை என்றும் வத்திக்கான் தெரிவித்துள்ளது.

தற்போது ரோமிலுள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போப் பிரான்சிஸ், சில நாட்கள் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டியிருக்கும் என்றும் வத்திகான் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

போப் பிரான்சிஸ் சமீப காலமாக முழங்கால் வலியால் அவதிப்பட்டு வந்ததால் சக்கர நாற்காலியை பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் போரைக் கண்டித்து ஓவியம் வரைந்த ரஷ்ய சிறுமியின் தந்தைக்கு 2 ஆண்டுகள் சிறை





ரஷ்யப் படைகள் உக்ரைன் மீது போர் தொடுத்ததை கண்டிக்கும் விதமாக, ஓவியம் வரைந்த ரஷ்ய சிறுமியின் தந்தைக்கு 2ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் வசிக்கும் தாய், மகள் மீது ரஷ்யப் படைகள் ஏவுகணை வீசுவதுபோல் மாஷா என்ற 12 வயது பாடசாலை மாணவி ஓவியம் தீட்டியுள்ளார். இது தொடர்பாக அவரது தந்தை மோஸ்காலியோவிடம் பொலிஸார் விசாரித்தபோது, அவரும் உக்ரைன் போரை கண்டித்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டமை தெரியவந்தது.

மோஸ்காலியோவை வீட்டிலேயே சிறை வைத்த பொலிஸார், மாஷாவை குழந்தைகளுக்கான காப்பகத்தில் சேர்த்தனர். மோஸ்காலியோவுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மோஸ்காலியோ வீட்டைவிட்டு தப்பிச் சென்றுள்ளார். காவலிலிருந்து தப்பிச்சென்ற மோஸ்காலியோவை பொலிஸார் தேடிவருகின்றனர்.

## பாகிஸ்தானில் பன்மடங்கு உயர்ந்த அத்தியாவசியப் பொருட்களின் விலை

# இலவசமாக வழங்கப்படவிருந்த கோதுமை மாவை சூறையாடிய மக்கள்



பாகிஸ்தானில், கடும் பொருளாதார நெருக்கடி நிலவுவதால் அங்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளது. இந்நிலையில், கோதுமை மா ஏற்றிச்சென்ற லொறியை நூற்றுக்கணக்கானோர் முற்றுகையிட்டு மாவு மூடைகளை சூறையாடியுள்ளனர்.

ரமழான் நோன்பை முன்னிட்டு பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாகாணத்தில் வசிக்கும் ஏழை குடும்பங்களுக்கு தலா 10 கிலோ கோதுமை மா இலவசமாக வழங்க அந்நாட்டு அரசு உத்தரவிட்டது.

கோதுமை மா மூடைகளுடன், பெஷாவர் நகரம் வழியாக சென்ற லொறியை விரட்டிச்சென்று பிடித்த பொதுமக்கள், லொறி மீது முண்டியடித்து ஏறி அனைத்து மூடைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

இலவச கோதுமை மாவை பெற முயன்றபோது நேர்ந்த தள்ளுமுள்ளுவில் இதுவரை 4 முதியவர்கள் உயிரிழந்துள்ளனர்.

# 16ஆவது ஐ.பி.எல். திருவிழா இன்று ஆரம்பம்

## ஆரம்ப விழாவில் தமன்னா



(ரமணி)




கிரிக்கெட் உலகின் பிரமாண்டமான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் 16ஆவது பருவகாலத்திற்கான தொடர் இன்று வெள்ளிக்கிழமை அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் ஆரம்பமாகிறது.

முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், குஜராத் டைட்டன்ஸ் ஆகியவை மோதுகின்றன. 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரமாண்டமான முறையில் ஆரம்பவிழா நடைபெற உள்ளது. ஆரம்பவிழாவில் நடிகை தமன்னா பங்குபற்றுவார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்மிகா மந்தனா, டைகர் ஷெராஃப், கத்ரீனா கைஃப், அரிஜித் சிங் ஆகியோரும் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப விழாவில் பாடகர் அரிஜித் சிங் இசையமைக்கவுள்ளார்.

நடிகை தமன்னா பாட்டியா பங்கேற்பதை ஐ.பி.எல். அதன் சமூக ஊடகங்களில் உறுதிப்படுத்தியது. பி.சி.சி.ஐ. வாய் திறக்காமல் இருந்தபோதிலும், நிகழ்ச்சியில் பங்கேற்க ராஷ்மிகா மந்தனா மற்றும் சிலரை அணுகியதாக ஒரு சலசலப்பு உள்ளது. உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமான நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் சிறப்பு லேசர் ஷோ நடைபெறவும் வாய்ப்புள்ளது. தொடக்க விழா மாலை 6 மணிக்கு தொடங்கி சுமார் 45 நிமிடங்கள் வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10 அணிகளின் கெப்டன்களும் தொடக்க விழாவில் கலந்துகொள்ள மாட்டார்கள். இருப்பினும், அனைத்து கெப்டன்களும் புதன்கிழமை நடைபெறும் கெப்டன் சந்திப்புக்காக அஹமதாபாத்தில் சந்திப்பார்கள்.

இன்று நடைபெறும் தொடக்கத்தின்போது, குஜராத் டைட்டன்ஸ் கெப்டன் ஹர்திக் பாண்டியா, சென்னை சுப்பர் கிங்ஸ் கெப்டன் மகேந்திர சிங் டோனி ஆகிய இருவரும் கலந்து கொள்வார்கள். குஜராத் டைட்டன்ஸ் தனது ரசிகர்கள் முன்னிலையில் சொந்த மைதானத்தில் விளையாடுவது இதுவே முதல் முறை.

# தொடரை சமப்படுத்துமா இலங்கை?

## நியூசிலாந்துடனான இறுதி ஒருநாள் ஆட்டம் இன்று




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

சுற்றுலா இலங்கை அணிக்கும், நியூசிலாந்து அணிக்கும் இடையிலான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது. நியூசிலாந்தின் ஹமில்டன் நகரில் நடைபெறும் இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரு டெஸ்ட் போட்டிகள், தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் ஆடுகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை நியூசிலாந்து அணி 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இந்நிலையில் அடுத்த தொடரான ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி கடந்த சனிக்கிழமை ஒக்லாந்த் நகரில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 198 ஓட்டங்களினால் படுதோல்வியடைந்தது. இரண்டாவது ஆட்டமும் மழையால் பாதிப்படைய, நியூசிலாந்து அணி தொடரில் 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளது. இந்நிலையில் இன்று நடைபெறும் மூன்றாவது ஒருநாள் ஆட்டமானது இலங்கை அணிக்கு மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது.

காரணம் இலங்கை அணி தொடரை சமப்படுத்த காத்திருக்கும் அதேவேளை, ஐ.சி.சி உலகக்கிண்ண தொடருக்கு நேரடியாக தகுதிபெறுவதற்கும் இந்த ஆட்டத்தில் பெறும் வெற்றி இன்றியமையாததாக காணப்படுகிறது.

# மட்டு. ஆனைப்பந்தி பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி






(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் 2023ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் பாடசாலை அதிபர் எம். பத்மநாபன் தலைமையில் இடம்பெற்ற இவ் இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரும், சிறப்பு அதிதியாக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும், கல்லூரியின் பழைய மாணவியுமான சுபா சக்கரவர்த்தியும், கௌரவ அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவரஜனி உதயாகரனும், விசேட அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலய சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் கே. ரவீந்திரனும் கலந்து கொண்டனர்.

இதன்போது இடம்பெற்ற அணிநடை மற்றும் உடற்பயிற்சிக் கண்காட்சி அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.

# உலக சாதனை படைத்த ஷகிப்



சுற்றுலா அயர்லாந்து - பங்களாதேஷ் அணிகள் இடையிலான 2ஆவது டி20 போட்டி சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடந்தது. மழையால் 17 ஓவர்களாக குறைக்கப்பட்ட இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த பங்களாதேஷ் அணி 17 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 202 ரன்கள் குவித்தது. தொடக்க ஆட்டக்காரர் லிட்டான் தாஸ் 18 பந்துகளில் அரைசதத்தை கடந்தார். அதிவேக அரைசதம் அடித்த பங்களாதேஷ் வீரர் என்ற பெருமையை பெற்ற லிட்டான் தாஸ் 83 ரன்கள் (41 பந்து, 10 பவுண்டரி, 3 சிக்சர்) திரட்டி உள்ளூர் ரசிகர்களுக்கு விருந்து படைத்தார்.

பின்னர் ஆடிய அயர்லாந்து அணி 9 விக்கெட்டுக்கு 125 ரன்களுக்குள் சுருண்டது. இதனால் பங்களாதேஷ் 77 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் 2-0 என்ற கணக்கில் வசப்படுத்தியது. இதில் ஷகிப் அல்-ஹசன் 4 ஓவர்களில் 22 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை சாய்த்தார்.

இதையும் சேர்த்து அவரது ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கை 136 ஆக (114 ஆட்டம்) உயர்ந்தது. இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்திய பவுலர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த நியூசிலாந்தின் டிம் சவுதியை (134 விக்கெட்) பின்னுக்கு தள்ளி ஷகிப் அல்-ஹசன் உலக சாதனை படைத்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7